25TH JULY 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 84 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

## பலஸ்தீனை தனி நாடாக அங்கீகரிக்க பிரான்ஸ் முடிவு

நிராகரிக்கும் அமெரிக்கா!



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், பலஸ்தீன

04ம் பக்கம்பார்க்க...

# கல்வித் துறையில் பாரிய மாற்றங்கள் சமூக பொருளாதார மட்டத்திலும் உயர்வு

## அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்

### ஜனாதிபதி அநுர பாராளுமன்றில் அறைகூவல்



உத்தேச கல்வி சீர்திருத்தம் வெறும் பாடத்திட்டத்தை திருத்துவதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்றும், அதே நேரத்தில் நாட்டின் முழு சமூக மட்டத்தையும் பொருளாதார மட்டத்தையும் ஒரேயடியாக உயர்த்தும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

இது ஒரு அரசியல் நோக்கிலான திட்டமன்றி ஒரு சமூக நோக்கம் கொண்டது என்பதால் அதற்கு ஆதரவளிக்குமாறும் ஜனாதிபதி கோரினார்.

02ம் பக்கம்பார்க்க...

## பிரதம நீதியரசர் தேர்வில் திலீப் நவாஸ் புறக்கணிப்பு

பிரதம நீதியரசர் பதவி நியமனத்தில் சேவை மூப்பு மற்றும் கல்வித் தகைமைகள் புறக்கணிக்கப்பட்டு புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டுள்ளார்.

13 வருடங்கள் உயர் நீதிமன்ற நீதியரசராக பணிபுரியும்

02ம் பக்கம்பார்க்க...

## உத்தேச கல்வி சீர்திருத்தத்தில் அடிப்படை உரிமையாக கல்வி அமைதல் வேண்டும்

### சஜித் பிரேமதாச வலியுறுத்து



கல்வி குறித்த விவாதத்தை உயர் மட்டத்திலான தரத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு வெள்ளை அறிக்கை அவசியமாக காணப்படுகிறது. என்றாலும், அத்தகைய வெள்ளை அறிக்கையை இதுவரை முன்வைக்கவில்லை. பிரித்தானிய பாராளுமன்ற முறைமையின் பிரகாரம்,

03ம் பக்கம்பார்க்க...

## எதிர்க்கட்சி முஸ்லிம் எம்.பீ.க்கள் தேசிய சூரா சபையினர் சந்திப்பு!

### முக்கிய விடயங்கள் பற்றி ஆராய்வு

தேசிய ஷூரா சபை எதிர்க்கட்சியில் உள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை புதனன்று (23) சந்தித்து தேசிய மற்றும் சமூக விவகாரங்கள் குறித்து கலந்துரையாடியது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம்,



## துருக்கி கல்வி அமைச்சருடன் பிரதமர் ஹரிணி பேச்சுவார்த்தை



பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் துருக்கியின் கல்வி

02ம் பக்கம்பார்க்க...

## தேசபந்து பதவி நீக்கம் ஆகஸ்ட் 5ல் பிரேரணை



பதவியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து

03ம் பக்கம்பார்க்க...

## புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பு

அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட கல்வி சீர்திருத்தங்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது, ஆலோசனை இல்லாமை, கொள்கையில் முரண்பாடுகள் மற்றும் மாணவர்கள் மீது ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்களை

02ம் பக்கம்பார்க்க...

## பிள்ளைகளுக்கு "ஹூ" வைப்பதற்கு வாய்ப்புக் கொடுங்கள்

டாக்டர் புத்திக பெற்றோரிடம் வேண்டுகோள்!

4 வயது பிள்ளைகள் உடற்பயிற்சி

02ம் பக்கம்பார்க்க...

## பேருவளை கடற்கரையில் மினி கோல்பேஸ்

(பீ.எம்.முக்தார்)

நடந்து முடிந்த நகரசபைத் தேர்தலின்போது NPP

02ம் பக்கம்பார்க்க...

## பலஸ்தீன் பெண்களை இலக்கு வைத்து எதிர்காலத்தை அழிக்கும் இஸ்ரேல்!

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில் வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

### பிள்ளைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளில் ஈடுபடுவது குறைவாக இருப்பதனால் பிள்ளைகளுக்கு குறைந்தபட்சம் வீடுகளில் “கூ“ வைப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென கொழும்பு தேசிய வைத்தியசாலை விளையாட்டு மற்றும் விஞ்ஞான வைத்திய பிரிவின் பணிப்பாளர் வைத்தியர். புத்திக லொகு கம்ஹேவா பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிள்ளைகள் உடற்பயிற்சி செயற்பாடுகளில் ஈடுபடுவது குறைவாக இருப்பதனால், காலப்போக்கில் இவர்கள் இரத்த அழுத்தம் நீரிழிவு போன்ற பல்வேறு பாரதூரமான நோய்களால் பாதிக்கப்படுவதாக வைத்தியர் மேலும் தெரிவித்தார். இந்த வயதுடைய பிள்ளைகள் ஒரு நாளைக்கு 150 நிமிடம் பல்வேறு உடற் செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும் எனவும் இவர்களது நித்திரை தடைப்படக்கூடாது எனவும் நாளொன்றுக்கு குறைந்தது 13 மணி நேரங்கள் தூங்குவதற்கு இடமளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகள் டிஜிட்டல் திரைகளுக்கு ஆர்வம் காட்டுவதாலும், சில பிள்ளைகள் தூக்கம் இல்லாததன் காரணமாகவும், இவர்கள் அமைதி இன்றி செயல்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாளாந்தம் ஒரு பிள்ளைக்கு குறைந்தபட்சம் 60 நிமிட நேரமாவது பல்வேறு உடற் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு பெற்றார் இடமளித்தால் வயது வந்த பின் இதயம் தொடர்பான நோய்கள் மற்றும் மாரடைப்பு போன்ற நோய்கள் ஏற்படுவதை தடுக்கலாம் எனவும் வைத்தியர் புத்திக லொகு கம்ஹேவா பரிந்துரைத்தார்.

### புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது சுட்டிக்காட்டுகிறது.

ஊவுரு செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறுகையில், தொழிற்சங்கம் சீர்திருத்தங்களை ”முற்றிலும் எதிர்க்கிறது” என்றார். இந்த சீர்திருத்தம் அவசரமானது என்றும், முக்கிய பங்குதாரர்களின் உள்ளீடு இல்லாதது என்றும் அவர் விவரித்தார்.

”இந்த சீர்திருத்தங்களில் புதிதாக எதுவும் இல்லை - அவை முன்பே விவாதிக்கப்பட்டுள்ளன. கல்வி அமைச்சர் வகுப்பு அளவை 30 மாணவர்களாகக் குறைப்பது பற்றிப் பேசுகிறார், ஆனால் இந்த ஆண்டு அவர் வெளியிட்ட சுற்றறிக்கையில் ஒரு வகுப்பிற்கு 40 மாணவர்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது எப்படி?” என்று ஸ்டாலின் கேள்வி எழுப்பினார்.

இந்த செயல்முறையை அவர் விமர்சித்தார், சீர்திருத்தங்களை தேசிய கல்வி நிறுவகம் அல்ல, தேசிய கல்வி ஆணைக்குழுவே வரைவு செய்ய வேண்டும் என்றும், அந்த நிறுவனத்திற்கு மூலோபாய தொலைநோக்கு பார்வை இல்லை என்றும் அவர் கூறினார். ”இந்த சீர்திருத்தங்களை வரைந்த குழு தேசிய கல்வி நிறுவனத்தில் உள்ளது. அவர்களுக்கு தொலைநோக்கு பார்வை இல்லை,” என்று அவர் கூறினார்.

”பாடசாலையிலிருந்து இடைவிலகல் பற்றி ஜனாதிபதி பேசினார், ஆனால் இந்த சீர்திருத்தங்கள் அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும்,” என்று அவர் மேலும் கூறினார்.

பாடசாலை நேரத்தை நீட்டிக்கும் திட்டங்களுக்கு ஸ்டாலின் மேலும் ஆட்சேபனை தெரிவித்தார், ஆசிரியர்கள் முறையான ஆலோசனை இல்லாமல் பிற்பகல் 2 மணி வரை பணியில் இருக்க அழுத்தம் கொடுக்கப்படுவதாகக் கூறினார். ”இந்த தன்னிச்சையான முடிவுகளை நாங்கள் முற்றிலும் எதிர்க்கிறோம்,” என்று அவர் கூறினார்.

# ஊடகவியலாளரும், எழுத்தாளருமா,சமூக சேவகியுமான ஸக்கியா பரீத் சித்தீக் காலமானார்



தெஹிவளையைச் சேர்ந்த ஸக்கியா பரீத் சித்தீக் காலமானார். கிருங்கதெனியவைச் சேர்ந்த காலஞ்சென்ற பரீத் ஆசிரியரின் மனைவியும் ஸ்ரீலங்கன் விமான சேவையின் சென்னை நிலைய முகாமையாளர் பௌஸான், சஹ்ரான் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் நவமணி ஆசிரிய பீடத்திலும் பணி புரிந்தார். முஸ்லிம் ஆளுமைகள் உட்பட 07 நூல்கள் எழுதியுள்ள இவர் சமூக சேவையிலும் அதிக ஈடுபாடு காட்டினார்.

அன்னாரின் ஜனாஸ ா வியாழனன்று (24) அஸர் தொழுகையின் பின்னர் தெஹிவளை ஜும்ஆப் பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### பேருவளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்த 18 அம்ச வேலைத் திட்டங்களில் மிகப்பிரதானமானவைகளில் ஒன்றான Mini Galle Face ஐ அமைப்பதற்கான Beruwala Beach Area வை சுத்தம் செய்யும் பணி ஆரம்பிக்கப்பட உள்ளது.

இன்று (25) பாராளுமன்ற உறுப்பினர் சந்திம ஹெட்டியாராச்சி தலைமையில் பேருவளை நகரசபை நகரபிதா மபாஸிம் அஸாஹிர் பங்குபற்றுதலுடன் Beruwala Beach Area வை சுத்தம் செய்யும் பணி ஆரம்பமாகியது.

### துருக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் யூஸூப் டெகினைச் சந்தித்து இரு தரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடினார்.

இதன்போது கல்வி, சுகாதாரம், சுற்றுலா, வர்த்தகம்,உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து பேசப்பட்டதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலிப் நவாஸ் புறக்கணிக்கப்பட்டு அவரை அடுத்து 11 வருட சேவை மூப்புள்ள பத்மன் சுரசேனவை பிரதம நீதியரசராக நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஏற்கனவே மேல் நீதிமன்ற பதில் தலைவராக இருந்த நீதியரசர் லபர் உயர் நீதிமன்றத்திற்கு உள்வாங்கப்படாதது போன்று இந்த நியமனத்திலும் திலிப் நவாஸ் புறக்கணிக்கப்படுகின்றமையானது தற்போது நீதித்துறையில் பேசுபொருளாக மாறி இருக்கின்றது. உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் அக்பருக்கு பின்பு பிரதம நீதியரசராக வரும் வாய்ப்பு திலிப் நவாஸ/க்கு இருந்த போதும் இந்த வாய்ப்பு இப்போது மறுக்கப்பட்டுள்ளது.

இன்று அரசியலமைப்பு பேரவை கூடும் போது புதிய பிரதம நீதியரசர் தெரிவு இடம்பெறவிருக்கின்றது. பத்மன் சுரசேனவின் பெயரை அரசியலமைப்பு குழுவுக்கு ஜனாதிபதி சிபாரிசு செய்திருப்பதாக அரசாங்க செய்திகள் நேற்று தகவல் வெளியிட்டிருந்தன.

### 49வது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, நாளை நடைபெறும் கவுன்சில் கூட்டத்தில் இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளது.

தற்போது பிரதம நீதியரசராகப் பணியாற்றி வரும் முர்து பெர்னாண்டோ, இந்த மாதம் 27 ஆம் திகதி ஓய்வு பெற உள்ளார்.

அதன்படி, நாட்டின் அடுத்த பிரதம நீதியரசர் நாட்டின் 49 வது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட உள்ளார்.

### மஹர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பவர்களுக்கு செல்போன்கள், போதைப் பொருட்கள் போன்றவை வீசப்பட்டன.

அதேநேரம் இஸ்லாமிய ஒருவர் இறக்கும் போதும் விவாக நிகழ்வுகளின் போதும் பலர் இந்த பள்ளிவாசலுக்கு வந்தனர். இதனால் அதிகாரிகள், கைதிகளினதும் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. அதனால் தான் அப்போதைய சிறைச்சாலை அத்தியட்சகரினால் பள்ளிவாசல் மூடப்பட்டது.

இந்த பள்ளிவாசலை மீண்டும் திறந்தாள் அதே பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மீண்டும் ஏற்படும். எனவே பள்ளிவாசலை மீண்டும் திறக்க அனுமதிக்க முடியாது. அதேவேளை சிறைச்சாலைக்கு சொந்தமான 5 பேர்ச்சஸ் காணி அங்குள்ளது. தேவையானால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாதவாறு அந்தக் காணியை வழங்க நடவடிக்கை எடுப்போம். ஆனால் மஹர சிறைச்சாலை வளவினுள் காணப்படும் பள்ளிவாசலை மீண்டும் திறக்க அனுமதிக்கப்படாது என்றார்.



## பலஸ்தீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஐ.அப்துல் நஸார்

குழந்தைகளைப் பெற்றெடுக்கும் திறன் இருப்பதன் காரணமாக இஸ்ரேல் வேண்டுமென்றே காஸாவில் உள்ள பலஸ்தீன பெண்கள் மற்றும் சிறுமிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதாக ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேலின் நடவடிக்கைகள் பலஸ்தீனர்களுக்கு எதிரான இனப்படுகொலை செய்வதற்கான “முன்னொருபோதுமில்லாத மற்றும் இரக்கமற்ற திட்டத்தின்“ ஒரு பகுதியாகும் என ஐ.நா. விசேட தூதுவர் ரிம் அல்-சலீம் தெரிவித்தார். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் உட்பட அனைத்து பலஸ்தீனர்களும் துன்பப்படுகிறார்கள், ஆனால் பெண்கள் மற்றும் சிறுமிகள் தனித்துவமாக மற்றும் வேண்டுமென்றே தாக்கப்படுகிறார்கள் என அவர் வலியுறுத்தினார்.

பலஸ்தீன பெண்கள் பலஸ்தீன வாழ்க்கையின் எதிர்காலத்திற்கான நம்பிக்கையை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதை இஸ்ரேல் அறிந்திருப்பதாக அல்-சலீம் விளக்கினார். எனவே, பலஸ்தீன மக்களின் தொடர்ச்சியை பலவீனப்படுத்த அவர்கள் வேண்டுமென்றே குறிவைக்கப்படுகிறார்கள். இந்த நடவடிக்கைகள் பலஸ்தீன இருப்பைக் குறைப்பதற்கும் பலஸ்தீன வாழ்க்கைச் சுழற்சியை உடைப்பதற்குமான நோக்கைக் கொண்டவை என அவர் தெரிவித்தார்.

கடுமையான உணவுப் பற்றாக்குறை மற்றும் முற்றுகை நிலைமைகள் காரணமாக பலஸ்தீன பெண்களிடையே கருச்சிதைவுகள் மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுகளில் சடுதியான அதிகரிப்பு இருப்பதாக ஐ.நா. அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவளிக்க போராடுகிறார்கள். இது தவிர, இஸ்ரேல் குழந்தை பால்மா போன்ற முக்கியமான பொருட்களைத் தடுத்துள்ளது, காஸாவில் மனிதாபிமான நெருக்கடியை மோசமாக்கியுள்ளது.

இரண்டாம் உலகப் போரின் ஸ்டாலின்கிராட் போரின் போது காஸா மீதான இஸ்ரேலின் முற்றுகையை நாஜி ஜெர்மனியின் மிருகத்தனமான முற்றுகையுடன் அல்-சலீம் ஒப்பிட்டார். காஸாவிற்குள் நுழையும் முக்கிய வைத்திய மற்றும் உணவுப் பொருட்களைத் தடுக்கும் முற்றுகையை அவர் கண்டித்தார். இந்தக் கடுமையான கட்டுப்பாடு பலஸ்தீன குடும்பங்கள் மற்றும் குழந்தைகளின் உயிர்வாழ்வை கடுமையாக அச்சுறுத்தலுக்குள்ளாக்குகின்றது.

இஸ்ரேலின் நடவடிக்கைகளை இனப்படுகொலையாக அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்தை ஐ.நா வலியுறுத்தியது. பலஸ்தீன பொதுமக்கள், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாக்க அவசர நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுத்தது. உயிர்களைக் காப்பாற்றவும் மேலும் துன்பங்களைத் தடுக்கவும் காஸாவிற்கு உடனடி மனிதாபிமான உதவி கிடைக்க வேண்டியதன் அவசியத்தையும் ஐ.நா வலியுறுத்தியுள்ளது.

## உத்தேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பத்தில் பச்சை அறிக்கை முன்வைக்கப்படும். பின்னர் ஒரு வெள்ளை அறிக்கை தயாரிக்கப்படும். கல்விச் சீர்திருத்தங்களை வலுவாகவும் வினைதிறனாகவும் முன்னெடுத்துச் செல்ல இதுபோன்ற ஒரு வெள்ளை அறிக்கை மிகவும் அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி இது தொடர்பாக ஒரு வெள்ளை அறிக்கையைத் தயாரித்து, ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போதும், பின்னர் வந்த தேர்தலிலும் முன்வைத்தது, சமூக இணக்கப்பாட்டை எட்டிக்கொண்டது. அரசாங்கம் “ஹறநசீஹைவெ முன்வைப்பைத் தாண்டி ஒரு வெள்ளை அறிக்கையை முன்வைக்கும் பட்சத்தில், அதன் ஊடாக சிறந்த கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் முற்போக்கான கல்விச் சீர்திருத்தத்தை நோக்கிச் செல்ல முடியுமாக இருக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கல்விச் சீர்திருத்தம் என்பது காலத்தின் அவசியமாகும். அது நிகழும்போது, குறித்த இலக்குகளையும் எதிர்பார்ப்புகளையும் எவ்வாறு அடைவது என்பது குறித்த தெளிவான புரிதல் காணப்பட வேண்டும். இந்த சீர்திருத்தங்கள் ஒரு குறிப்பிட்ட கால அட்டவணையுடன் செயல்படுத்தப்பட வேண்டும். எந்தவொரு செயல்முறையும் ஒழுங்கற்ற முறையில் தொடங்கினால், அதன் முடிவு வெற்றிகரமான ஒன்றாக அமையாது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன்று நாட்டில் காலாவதியான, பழைய முறைகளைப் பின்பற்றும், பாரம்பரிய கட்டமைப்பிற்குள் மட்டுண்ட கல்வி முறையே காணப்படுகிறது. இது நம் நாட்டு மாணவர்களுக்கு செய்யும் மிகப்பெரிய அநீதியாகும். கல்வி என்பது மனித உரிமையும் அடிப்படை உரிமையும் ஆகும். தற்போதைய அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை முன்னெடுத்தால், நலன்புரி பொருளாதாரத்தின் முக்கிய அம்சங்களான கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், வாழும் உரிமை, பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், மதம் மற்றும் அரசியல் போன்ற உரிமைகள் மனித மற்றும் அடிப்படை உரிமைகளாக அமையும் விதமாக இருக்க வேண்டும். தற்போதைய கல்வி முறைமை புதுப்பிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக இன்று (24) பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

கல்வியை ஸ்மார்ட்டான ஒன்றாக மாற்றும் போது ஸ்மார்ட் மாணவர், ஸ்மார்ட் இளைஞன், ஸ்மார்ட் குடிமகன், ஸ்மார்ட் நாடு உருவாகும். கல்வியில் வழக்கமான மனப்பாடம் செய்யும் கற்றல் முறைமை இல்லாதொழித்து, நாடும் உலகமும் எதிர்கொண்டு பன்முக பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்குத் தீர்வுகளை வழங்கக்கூடிய குடிமக்களை உருவாக்க வேண்டும். நமது நாட்டின் கல்வித்துறையில் தகவல் தொழில்நுட்பம் கட்டாயமாக்கப்பட வேண்டும். விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், ஆங்கிலம், கலை மற்றும் கணிதம் ஆகிய துறைகளை நோக்கிச் செல்ல வேண்டும். ஆங்கில மொழியை மையமாகக் கொண்ட கல்வி சகல பாடசாலை கட்டமைப்பிலும் முன்னெடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

- பிள்ளைகளின் கல்வி உரிமை, மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு, தரவு அறிவியல், ஸவுநுயுஆ துறை மற்றும் இயந்திரவியல் கற்றல் போன்ற புதிய தொழில்நுட்பக் கல்வியை நாட்டுப் பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். கல்விக்கான மனித உரிமையை நாம் உண்மையிலேயே பாதுகாக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

- பிரதமர் முன்வைத்த விடயங்களில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

பிரதமர் முன்வைத்த விடயங்களில மூலோபாய ரீதியான விடங்களோ செயல்பாட்டு ரீதியான நடவடிக்கைகளில் போதிய விவரங்களோ அடங்கியிருக்கவில்லை. இதை நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்துவது மற்றும் செயல்படுத்துவதற்கான காலக்கெடு என்பன தெளிவாகத் தெரியவில்லை. 2029 ஆம் ஆண்டில் உறுதியான அடைவுகள் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன. உரிய செயல் வரைவு காணப்படாத விடத்து, பாடசாலை கல்வியில் பாதிக்கும் மேற்பட்ட மாணவர்களால் இதன் பலன்களைப் பெற முடியாமல் போகும். பாலர் கல்வியில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையும் பிரதமர் தெளிவாக குறிப்பிடவில்லை. இந்த சீர்திருத்த திட்டத்தில் கிராமப்புற பாடசாலைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

- ஆல்பா மற்றும் பீட்டா தலைமுறைகளின் எண்ணங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

உயர்தரக் கல்வியை வழங்கும் 3,000 பாடசாலைகளில் 1,000 பாடசாலைகள் மாத்திரமே விஞ்ஞானம் மற்றும் கணிதக் கல்வியை போதிக்கின்றன. ஆசிரியர் பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து தெளிவான திட்டம் எதுவும் இந்த புதிய சீர்திருத்தத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆசிரியர்களின் நலன் கூட புறக்கணிக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் பயணத்தை ஆரம்பிக்க, பாடசாலைத் துறையில் ஈடுபட்டுள்ள சகலரையும் மையமாகக் கொண்டதொரு திட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டும். பாட வேளையின் கால அளவைக் கருத்தில் கொள்ளும்போது, ஆல்பா மற்றும் பீட்டா தலைமுறைகளின் எண்ணங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## தேசப்பந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


தென்னகோனை, அவரது பதவியில் இருந்து நீக்குவதற்கான யோசனையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் இன்று (24) விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க அதிகாரிகளை நீக்குதல் (நடைமுறைச்) சட்டத்தின் கீழ் 17 ஆம் உறுப்புரிமைக்கு அமைய, இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹிஸ்புல்லாஹ், உதுமான் லெப்பை, நிஸாம் காரியப்பர், முஜிபுர் ரஹ்மான், கபீர் ஹாஷிம், தாஹிர், இஸ்மாயில் முத்து மொஹமட், காதர் மஸ்தான், வாஸித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசிய ஷூரா சபையின் தலைவர் எம்.எம். ஸுஹைர், பொதுச் செயலாளர் ரஷீத் எம். இம்தியாஸ் மற்றும் முன்னை நாள் தலைவர் அஷ்ஷேக் எஸ்.எச். எம். பளீல் ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றியதுடன் தேசிய ஷூரா சபையின் நிறைவேற்றுக் குழு மற்றும் செயலக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 JULY 25 - FRIDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# கல்வி வெள்ளை அறிக்கையில் சிறுபான்மை எதிர்பார்ப்புக்களும் உள்ளடக்கப்பட வேண்டும்

நாட்டின் கல்வித் திட்டத்தில் சீர்திருத்தங்களை கொண்டு வருவதற்காக அரசாங்கம் கல்விக்கான வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. நவீன யுகத்தின் தேவைகளை கருதிக் கொண்டு கல்விக் கொள்கைகளில் மாற்றங்களை அறிவிப்பது குறித்து கல்வி அமைச்சு கடந்த பல மாதங்களாக கலந்துரையாடல்களை நடாத்தி வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில் இருந்தே இது தொடர்பாக அதிகாரிகள் மட்டத்திலும் கல்வி நிபுணர்கள் மட்டத்திலும் கலந்துரையாடல்கள் நடந்த வண்ணம் உள்ளன. இவ்வாறு நடந்த கலந்துரையாடல்கள் பற்றிய சில தகவல்கள் வெளிவந்ததை அடுத்து அது தொடர்பாக அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் தொழிற்சங்க பிரமுகர்கள் மட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன. கடந்த சில தினங்களாக இது தொடர்பாக ஊடகங்களில் பரவலாக பேசப்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மாவட்ட மட்டத்தில் கருத்துக்கணிப்புகளுக்காக கருத்தரங்குகளை நடத்தி வருகிறார். இவ்வாறான கருத்தரங்குகள் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது. சில தினங்களுக்கு முன் இவ்வாறானதொரு கருத்தரங்கு காலியிலும் நடைபெற்றதை அவதானிக்க முடிந்தது. இதேபோன்று நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான கருத்தரங்குகளை ஏற்பாடு செய்ய கல்வி அமைச்சு தயாராகி வருகின்றது.

நாட்டுக்குப் பொதுவான கல்வித் திட்டம் ஒன்றை வகுக்கும்போது சிறுபான்மை தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு கருத்துக்களும் கருத்தில் கொள்ளப்படுவது அவசியமாகும். இதுவரை இரு சமூகங்களுக்கு மத்தியிலும் இது தொடர்பான விரிவான கலந்துரையாடல்கள் எதுவும் இடம்பெற்றுமை குறித்து தகவல்கள் அறியப்பெறவில்லை. இரு சமூகங்கள் குறித்தும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தப்பட்டதாக அவதானிக்க முடியவில்லை. ஏற்படுத்தப் போகும் மாற்றங்கள் குறித்து தமிழ் முஸ்லிம் கல்வியலாளர்களிடமும் கருத்துக்கள் பெறப்பட வேண்டும். அதன் மூலமே சமூகத்தின் தேவைகளை உள்வாங்கி கல்வி சீர்திருத்தத்தை மேற்கொள்ள முடியும். கல்வி அமைச்சும் இந்த விடயத்தில் அக்கறை காட்டுவது அவசியமாகும். பேருந்து சென்றதன் பின் கை காட்டுவதை போலன்றி வெளிவரும் வெள்ளை அறிக்கையில் தமிழ் முஸ்லிம் சமூகங்களது எதிர்பார்ப்புகளும் உள்ளடக்கப்பட வேண்டும். தமிழ் முஸ்லிம் சமூகங்களின் அரசியல் பிரமுகர்கள், பிரதிநிதிகள் மற்றும் கல்வியலாளர்கள் இதைப் பற்றி தமது குரல்களை எழுப்ப வேண்டும் மேலும் இதன் மீது கரிசனை செலுத்தி வெளியிடப்படும் வெள்ளை அறிக்கையில் சிறுபான்மை சமூகங்களான தமிழ் முஸ்லிம் மற்றும் மலையக சமூகத்தின் கல்வித் தேவைப்பாடுகளும் உள்ளடக்கப்பட ஆவண செய்ய வேண்டும்.

பெரும்பான்மை சமூகத்திடம் மட்டும் இதை பற்றி பேசுவதைப் போன்று சிறுபான்மை சமூகத்தையும் உள்வாங்கி ஏற்படுத்த இருக்கும் மாற்றங்கள் குறித்து சிறுபான்மையினருக்கும் கல்வி அமைச்சின் தரப்பில் அறிவுறுத்த வேண்டும். ஏற்படுத்தவிருக்கும் மாற்றங்கள் குறித்து தமிழ் முஸ்லிம் கல்வியலாளர்கள் தனது சமூகத்தை பிரதி நிதித்துவப்படுத்தி பேச வேண்டும். அதன் மூலமே சமூகத்தின் தேவைகளை உத்தேச கல்வி சீர்திருத்தத்தில் உள்வாங்க முடியும். கல்வி அமைச்சது குறித்து அக்கறை காட்டுவது அவசியமாகும்.

பல்லினத்தவர்கள் வாழும் எமது நாட்டின் இன சௌபாக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் கல்வி சீர்திருத்தங்கள் அமையப்பெறுவது அவசியமாகும்.

ஒரு தனி சமூகத்தின் நலனாக மட்டும் கல்வி சீர்திருத்தங்கள் அமையக்கூடாது. எனவே கல்வி அமைச்சு இது குறித்து அக்கறை செலுத்தி தமிழ் முஸ்லிம் மலையக சமூகத்தின் கல்வியலாளர்களையும் கூட்டி இதுகுறித்த அவர்களது கருத்துக்களையும் பெறவேண்டும். இது தொடர்பாக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சிறுபான்மை கட்சிகளின் பிரதி நிதிகள் அக்கறை காட்டி இந்த நாட்டில் வாழ்கின்ற சகலருக்கும் பொருத்தமான கல்வித் திட்டத்தை உருவாக்குவதன் தேவையை வலியுறுத்த வேண்டும்.

மேலும் சிறுபான்மை சமூகத்தின் கல்வி தொடர்பாக ஆர்வம் உள்ளவர்கள் உடனடியாக களத்தில் இறங்கி மேற்கொள்ளவிற்கும் மாற்றங்கள் தொடர்பாக தமது சமூகத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். குறிப்பாக தமிழ் முஸ்லிம் பாடசாலைகள் இன்று ஒப்பிட்டளவில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் அதேவேளை ஆசிரியர் பற்றாக்குறை உட்கட்டமைப்பு வசதிகளின் குறைபாடு போன்ற விடயங்களும் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. கடந்த காலங்களில் காட்டப்பட்ட இன ரீதியான பாரபட்சங்களும் இதற்கு முக்கிய காரணங்களாக இருந்துள்ளன. எனவே இந்த நிலை தொடராத வகையில் கல்வி சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்.

# மஹறையில் பள்ளி கட்டுவதற்கு அரசின் தலையீடு அவசியம்

## எஸ்.எம்.மரிக்கார் எம்.பீ. வேண்டுகோள்!



மஹறையில் அமைந்துள்ள சிறைச்சாலை பள்ளியை திறக்க முடியாதென நீதியமைச்சர் திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில் அப் பகுதியில் பள்ளியொன்றினை நிர்மாணிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்டுமென்றும் அதற்கான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் வேண்டுகோள் விடுத்தார்.

மஹர சிறைச்சாலை பள்ளி குறித்து பாராளுமன்றில் நீதியமைச்சரிடம் கேள்வி எழுப்பி பேசும் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார். மஹறையில் அமைந்துள்ள சிறைச்சாலை பள்ளியை திறக்க முடியாதென நீதியமைச்சர் திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில் அப் பகுதியில் பள்ளியொன்றினை நிர்மாணிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்டுமென்றும் அதற்கான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் வேண்டுகோள் விடுத்தார்.

# யாழ். வேம்படியில் 9 ஏ பெற்ற மாணவி

(பரீட் இக்பால்)

யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த பாத்திமா நுஹா அண்மையில் நடந்த க.பொ.த.(சா/த) பரீட்சையில் 9 ஏ சித்தியடைந்து தனது குடும்பத்திற்கும் யாழ். மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவியாவார்.

பாத்திமா நுஹா, முஹம்மது நவ்பர் - சனூன் நபீரா தம்பதியினரின் புதல்வியான இவர் எம்.ஏ.சி.சனூனின் பேத்தியுமாவார்.

## பலஸ்தீனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிப்பதாக அறிவித்துள்ளார்.

பலஸ்தீன அரசை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிப்பது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு செப்டம்பரில் வெளியிடப்படும் என்றும், நியூயார்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் முறையான அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தனது ட்விட்டர் கணக்கில் ஒரு பதிவில், காசா பகுதியில் போரை முடிவுக்குக் கொண்டு வந்து பொதுமக்களைக் காப்பாற்றுவது அவசரமானது என்றும், உடனடியாக போர் நிறுத்தம் எட்டப்பட வேண்டும், அமைதி ஏற்படுத்தப்பட வேண்டும், அனைத்து பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி கூறியுள்ளார்.

காசா மக்களுக்கு தற்போது பாரிய மனிதாபிமான உதவி தேவைப்படுவதாகவும் பிரான்ஸ் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், பிரான்சின் முடிவை அமெரிக்கா கடுமையாக நிராகரித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# விஸ்டம் சர்வதேச பாடசாலையின் வருடாந்த சந்தை ஆரம்ப நிகழ்வு





**(பீ.எம்.முக்தார்)**

விஸ்டம் சர்வதேச பாடசாலை தர்கா நகர் கிளையின் வருடாந்த சந்தை ஆரம்ப நிகழ்வு அதிபர் எம்.என்.எம்.மதனி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேருவளை பிரதேச சபை தலைவர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சந்தையில் பொருட்கள் விற்பனையை தொடங்கி வைத்தார்.

விஸ்டம் சர்வதேச பாடசாலையின் முகாமைத்துவ தலைவர் எம்.எச்.எம்.பௌஸர் /ஹுஸைன் (நளீமி), அல்-ஹம்ரா மகா வித்தியாலய முன்னாள் அதிபர் எம். இஸட்.எம்.நயீம், பிரதேச சபை உறுப்பினர் புனைப் ஹனீப், எழுத்தாளர் சங்க தலைவர் எம்.ரபீஸ் ஹம்ஸா உட்பட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பேருவளை அல் ஹிக்மா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு போட்டி




**( பீ.எம்.முக்தார்)**

பேருவளை சினன் கோட்டை அல்-ஹிக்மா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் அதிபர் முனவ்வரா முனவ்வர் தலைமையில் நடைபெற்றது.

பேருவளை நகர சபை தலைவர் மபாஸிம் அஸாஹிர், பிரதேச செயலக சிறுவர் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் நிலூபா மதுசானி, அக்கரகொட கிராம உத்தியோகத்தர் மகேஷ் இந்திரஜித், அபிவிருத்தி உத்தியோகத்தர் நதீசா ஜயசேகர ஆகியோர் அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர்.

40 ஆவது ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் சிறார்களின் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்-



# அரகலய போராட்டம் கலைப்பு அடிப்படை மனித உரிமை மீறல்

## ரணிலுக்கு எதிராக உயர் நீதிமன்றம் தீர்ப்பு!

நாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் திகதியன்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த அப்போதைய பதில் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்ரமசிங்க பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தினார்.

இவ்வாறு அவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர கால சட்டம் அடிப்படை உரிமைகளை மீறுயதாக உயர் நீதிமன்றம் (23) தீர்ப்பளித்துள்ளது.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) **“உதயம்”** இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது. இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

editor.uthayam@gmail.com

# ரமழான் பரிசு மழை: பரிசளிப்பு நிகழ்வு






2025 புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு AMYS நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட “ரமழான் பரிசு மழை” போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசு வழங்கும் நிகழ்வு கடந்த 16.07.2025ஆம் திகதி புதன் கிழமை நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு நிறுவனத்தின் முகாமைத்துவப்பணிப்பாளர் அஷ் ஷெய்க் எம்.எஸ்.எம். தாஸீம் (கபூரி) அவர்கள் தலைமை தாங்கியதுடன், நிகழ்வின் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் கௌரவ எம்.எஸ்.எம். நவாஸ் அவர்கள் கலந்து கொண்துடன் விசேட அதிதியாக அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித் அவர்கள் கலந்து கொண்டார்.

நிகழ்வில் AMYS நிறுவனத்தின் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ஏ.ஜே.எம். வாரித் (MBA) அவர்களும் கல்வி மற்றும் சமூக சேவை தொண்டு நிறுவனங்களின் பணிப்பாளர்கள், இஸ்லாமிய அமைப்புக்களின் தலைவர்கள், அவற்றின் பிரதிநிதிகள், பிரபல தொழில் அதிபர்கள் என பலரும் கலந்து சிறப்பித்ததுடன், போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற போட்டியாளர்கள் உற்பட அவர்களுடைய பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

நடைபெற்ற போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெற்றிபெற்றவர் களின் பெயர் விபரங்களை கீழே காணலாம்.

முதல் பரிசு -ரூ.50,000.00
M.F.F. ASMA – THOTTAWATTA, PANADAURA

இரண்டாம் பரிசு - ரூ 30,000.00
M.H. ZAHRAN AHAMED BAMUNUMULLA, ATULUGAMA, BANDARAGAMA

மூன்றாம் பரிசு - ரூ20,000.00
M.H.F. SHAKIRA- THUNDUWA, GALLE.

ஆறுதல் பரிசுகள் ரூ 10,000.00 - 07 வெற்றியாளர்கள்
M.L.M.FAYEES VALAICHENAI
M.R. FAYAS AHMED-WELIGAMA
M.R.F SIMHA-SUNGAVILA, POLONNARUWA
C.M.F. ZAHEEKA-NINTAVUR-12
M.S.F SHAHANA- SUNGAVILA, POLONNARUWA
H.M. MUNSEETH-THOPPUR
FAZEENA SINNA LEBBE-ERAVUR.

ஆறுதல் பரிசுகள் ரூ 5,000.00 - 10 வெற்றியாளர்கள்
F.M.L.M. SAMHAN. – KEKIRAWA
M.S.M SAROOK – SAMMANTHURAI.
R.M.FAFA-SUNGAVILA, POLONNARUWA
M.SHAFRAS – HEMMATAGAMA.
M.N.M. JUMAILA – POTTUVIL-04
SIHANA FAROOK-GAMPOLA.
M.A.S. NAYEEMA-BOPITIYA TOWN, DELTOTA
A.M. RIHAN, -SAINTHAMARUTHU-09
KAMARDEEN FAWSUNA-CENTRAL CAMP, AMPARA
AL ASHAR – KEKUNUGOLLA



கலேவெல பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் மனித உரிமைகள் உலகளாவிய பணியின் பணிப்பாளரும் சமாதான நீதீவானுமான டாக்டர் வீ.எம்.மவ்பித், ஐக்கிய நாடுகள் சபையின் மனித நேயம் சமாதான துதராக,கலாநிதியாக பட்டம் அளித்து கொளரவிக்கபட்டார்.

இதற்கான சான்றிதழ்களை அமெரிக்கா பல்கலைகழக பணிப்பாளரும் மனித உரிமை உலகளாவிய பணியின் தலைவரும்,பேராசிரியர் டாக்டர் மது கிசான், டாக்டர் கதாவாஹத் ஆகியோரினால் வழங்கப்பட்டு கௌரவித்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம்

**(ஏ.ஸி.ஏ.முனாஸ் - வஹக்கோட்டை )**

# பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி பழைய மாணவிகளால் மஹரகம அபேக்ஷா ஆஸ்பத்திரிக்கு மருத்துவ உபகரணங்கள்



**(அஷ்ரப் ஏ சமத்)**

கொழும்பு 4 முஸ்லிம் மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தினால் சேகரிக்கப்பெற்ற நிதியில் மஹரகம அபேக்ஸா புற்றுநோய் வைத்தியசாலைக்கு 2 Inpusion Pumps, and Mutli Para Monitor மருத்துவ அதிகாரி டொக்டர் ரொசான் அமரதுங்க, பிரதான தாதி திருமதி குருசிங்கவிடம் கையளித்தனர்.

இத் திட்டத்தினை திருமதி ராசியா உவைம், சமான் நாசீம் ஆகியோர் முன்னெடுத்தனர். கல்லூரி அதிபரும் பழைய மாணவிகள் சங்கத்தின் தலைவி நஸ்ரியா முனாஸ், மற்றும் பழைய மாணவிகள் சங்கத்தின் உப தலைவி பெரோஸா முசம்மிலும் மற்றும் செயற்குழு அங்கத்தவர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

# சுஹைலை மீட்டெடுக்க வீட்டை அடகு வைத்த தந்தை

## – சமூகம் உதவ வேண்டுமெ ன்கிறார் தந்தை –



எம்.எஸ். அமீர் ஹுசைன்

மாவனல்லையைச் சேர்ந்த சுஹைல் என்ற இளைஞர் 9 மாதங்களாக தகுந்த காரணம் இன்றி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2025.07.16 ஆம் திகதி தலா 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அதற்கான உத்தரவை கல்கிச்சை மேலதிக நீதவான் ஹேமமாலி ஹால்பந்தெனிய வழங்கினார். தெஹிவலை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி 2025.07.09 ஆம் திகதி நடைபெற்ற விசாரணையின் போது இந்த இளைஞர் எந்த குற்றமும் புரியவில்லை. அவரை பிணையில் விடுவதற்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்திருந்தார். எனினும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவரை பிணையில் விடுதலை செய்யும் அதிகாரம் மாஜிஸ்ரேட் நீதவானுக்கு இல்லை என்பதால் அதுபற்றி நீதவானால் பொலீஸ் பொறுப்பதிகாரியிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அவ்வாறு விடுதலை செய்வதாக இருந்தால் சட்டமா அதிபரின் அனுமதி தேவை என்று நீதிபதி அறிவித்திருந்தார்.

அதன்படி 2025.07.16 ஆம் திகதி சட்டமா அதிபரின் அனுமதி பெறப்பட்டு அதுபற்றி நீதவானுக்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் சுஹைல் இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்டார். இவர் 2024.10.23 ஆம் திகதி தெஹிவலையில் தொழில் நிமித்தம் தங்குமிடம் ஒன்றை தேடி சென்று கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அப்பகுதியில் அமைந்திருந்த இஸ்ரேல் சபாத் ஹவுஸ் ஒன்றுக்கு அருகாமையில் நின்று கொண்டிருந்ததாக கூறி தெஹிவலை பொலீசாரால் கைது செய்யப்பட்டிருந்தார். 2024.10.24 ஆம் திகதி அவர் கல்கிச்சை மாஜிஸ்ரேட்டில் ஆஜர் செய்யப்பட்டு குற்றச்சாட்டுக்கள் இல்லை என்ற நிலையில் விடுதலை செய்யப்பட்டார். அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர் வீடு வந்து சேரும் போதே அதே பொலீஸ் நிலைய பொறப்பதிகாரி மாவனல்லைக்கு வந்து மீண்டும் சுஹைலை வாக்குமூலம் பெற என்று அழைத்துச் சென்று பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 9 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவரை கைது செய்த நாளில் இருந்து 2025.07.16 ஆம் திகதி பிணையில் விடுதலை செய்யப்படும் வரையில் அவரது தந்தையான எம். எல்.எம் ரிபாய் மகனை வெளியே எடுக்க கடுமையான முயற்சிகளை செய்துள்ளார். இவர் ஒரு சாதாரண கூலித் தொழிலாளியாவார். மாவனல்லை நகரத்தில் கடையொன் றில் ஒருநாளைக்கு 1500 ரூபா சம்பளத்திற்கு வேலை செய்கின்றார். கிடைக்கின்ற வருமானம் தமது குடும்பத்தை நடத்தவே போதுமானதாக இல்லாத நிலையில் சுஹைலை விடுதலை செய்யும் வரையில் நீதிமன்றம், சட்டத்தரணிகள் மற்றும் போக்குவரத்து என்று 10 இலட்சம் ரூபாவுக்கு மேல் செலவு செய்ததாக தெரிவிக்கின்றார்.

எவ்வாறாயினும் இந்த இளைஞன் தகுந்த காரணம் இன்றி கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 9 மாதங்களாக தடுத்து வைக்கப் பட்டிருந்த நிலையில் அவர் சார்பாக ஆஜராகி இருக்கின்ற சமூக நீதிக்கான அமைப்பின் சட்டத்தரணிகள் குழு இவரை விடுவிப்பதற்கான முயற்சிகளில் இறங்கி கடுமையாக பாடுபட்டனர். இந்த அமைப்பின் சார்பாக மன்றில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி கீத்ம பெர்னாண்டோ மற்றும் சட்டத்தரணிகளான ரஷாத் அஹமத், இல்ஹாம் ஹஸனலி, எம்,கே.எம். பர்ஸான் ஆகியோர் மன்றில் வாதங்களை முன்வைத்ததன் பிரதிபலனாக சுஹைலை விடுதலை செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதற்காக சுஹைலின் தந்தை நன்றிகளை தெரிவிக்கின்றார்.

என்றாலும் இந்த சட்டத்தரணிகளை சந்திக்கும் வரையில் கடந்த சில மாதங்களாக தாம் பாரிய செலவினங்களையும் சிரமங்களையும் சந்தித்ததாக தெரிவிக்கின்றார். ஹெம்மாதகமையில் அமைந்துள்ள அவரது வீட்டை அன்னிய மத சகோதரர் ஒருவருக்கு அடகு வைத்து 2 இலட்சம் ரூபா பணம் பெற்றிருப்பதாகவும் அதற்காக பணத்தை கொடுக்கும் வரையில் அந்த சகோதரருக்கு மாதாந்தம் 20,000 ரூபா கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றார். அத்துடன் வேறு சில நபர்களிடமும் ளாதார சுமையை இறக்கி வைக்கும் எண்ணத்தில் தலைநகருக்கு சென்ற அவருக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனால் அவரது தந்தை சாதாரண கூலி வேலை செய்து கிடைக்கின்ற 1500 ரூபா ஊதியத்தின் மூலமே குடும்ப செலவுகளை ஈடு செய்து வருகின்ற நிலையில் மாவனல்லையில் வாடகை வீடொன்றில் வசித்து வருகின்றனர்.

எவ்வாறோ மகனை குற்றச்சாட்டுக்ள இன்றி 9 மாதங்களின் பின்னர் விடுதலை செய்தாலும் அதனால் முகம் கொடுத்த பொருளாதார இழப்பும் அவர் போன்ற ஒருவரால் சுமக்க முடியாத சுமை என்பதால் நலன்விரும்பிகளது உதவியை நாடுகின்றார்.






# வகுப்பறைக்குள் வாசிப்பு மூலையை உருவாக்குதல்

வகுப்பறைகள் எப்பொழுதும் மாணவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய விதத்தில் அமைய வேண்டும். எந்த நேரமும் பாடப் புத்தகங்களோடும் பயிற்சிகளோடும் மாத்திரம் செயற்படக் கூடியவர்களாக அவர்களை உருமாற்றாமல் மேலதிக நேரங்களில் சிந்தனையை கிளறி வளர்த்துக் கொள்ளவும் மேம்படுத்தவும் பொருத்தமான வகையில் பாடத்திட்டத்தோடும் பாடநூல்களோடும் தொடர்பு பட்ட வகையிலும் அதற்கு அப்பாலும் சிந்தனைகளை ஏற்படுத்தி விடக்கூடிய நூல்களை அறிமுகம் செய்வதும் வாசிக்க தூண்டுவதும் வழிப்படுத்துவதும் வகுப்பாசிரியர்களும் பாட ஆசிரியர்களதும் பாடசாலையில் நூலகரதும் பொறுப்பாக உள்ளது

பரீட்சை மையப்பட்ட இன்றைய எமது கல்வித் திட்ட ஒழுங்குகளுக்கு அப்பால் சென்று மாணவர்களது சுய சிந்தனையை ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிக்கொணரவும் புத்தகங்களை கொண்டு வரவும் மேலதிக வாசிப்பு நிச்சயம் அவர்களுக்கு உதவி செய்யும். அதற்கு ஏற்றாற் போல் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக வகுப்பு மட்டத்தில் பாடத்தோடு தொடர்பான நூல்களை அறிமுகம் செய்ய வேண்டும் குறிப்பிட்ட தரங்களில் கற்க வேண்டிய நூல் பட்டியல் ஒன்றை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு காட்சிப்படுத்தவும் கையளிக்கவும் வேண்டும். அவை குறித்து கலந்துரையாட வேண்டும். குறிப்பிட்ட வகுப்பில் இருந்து இன்னொரு வகுப்புக்கு நகர்கையில் இன்னொரு தொகுப்பு நூல் பட்டியலையும் தயார் படுத்தி வைத்திருக்க வேண்டும். இந்த தொடர் செயற்பாடானது கலைத்திட்டத்திற்கு அப்பால் மாணவர்கள் தமது வாசிப்பாற்றலை மேம்படுத்திக் கொள்வதற்கும் சுயமாக இயங்குவதற்கும் கற்பதற்கும் தேடுவதற்கும் தொடர்ந்து வாசிப்பிலே நிலைத்திருப்பதற்கும் உதவியாக அமையும்.

மாணவர்கள் கற்பதில்லை ஆசிரியர்களின் கற்பித்தல், பாணிகள் பொருத்தமானதாக இல்லை என்ற குற்றச்சாட்டுகளை அடுக்கி வைப்பதை விடவும் சுயமாக கற்பதற்குரிய கற்றல் வளங்களை வகுப்பறை மட்டங்களில் ஏற்படுத்தி வழிகாட்டி விட்டாலே மாணவர்கள் சுயமாக இயங்குவார்கள் அவர்களுக்கு நவீன செயலிகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக அல்லது புத்தகங்களோடும் வாசிப்புடன் தொடர்பான குழுமங்களோடு இணைத்து விடுவதன் மூலமாகவும் புத்தகங்களின் மீது அலாதியான ஆர்வம் ஏற்படும். எல்லா மாணவர்களுக்கும் எல்லா புத்தகங்கள் மீதும் ஆர்வம் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை அவரவர் விருப்பம் ஈடுபாடு போன்றவற்றிற்கு அமைவாக புத்தகங்களை அறிமுகம் செய்தாலே குறிப்பிட்டு துறையில் அவர்கள் சாதிப்பார்கள்.

மாணவர்களுக்கு ஏற்ற வழிகாட்டல்கள் கிடைக்கின்ற பட்சத்தில் அவர்கள் மூலமாக உருவாக்க முடியுமான சாதனைகள் பரந்துபட்டதாக அமையும்.

# கலாநிதி நஜீப் ஹாஜியின் வாழ்க்கைப் போராட்டம் நூல் வெளியீடு





(அஷ்ரப் ஏ சமத்)

கலாநிதி நஜீப் பின் அமீர் ஆலிம் வாழ்க்கைப் போராட்டம் நூல் வெளியீடு (19) தர்கா நகர் மர்ஹபா மண்டபத்தில் நடைபெற்றது.
இந் நிகழ்வில் பிரதம அதிதியாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர். தே. செந்தில் வேலவர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார் நூலின் முதல் பிரதியை நஜிப் பின் அமீர் திருமதி நஜீப் ஆகியோர்கள் பிரதம அதிதி செந்தில்வேலவரிடம் கையளித்தார்கள்.
தினகரன் இணைஆசிரியர் மர்லின் மரிக்கார், உதவி ஆசிரியர் அஜ்வத் பாசி, மற்றும் பி.எம். முக்தார், நூலை எழுதிய நூலாசிரியர் பாயிஸா ஜூனைட் கைஸ், மற்றும் கலாநிதி நஜீப் குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்
நூலை பற்றிய விமர்சனத்தை பஸ்லி ஹமீத் நிகழ்த்தினார்

# சுடர் விடும் ஆளுமை அதிபர் கலீலுர் றஹ்மானின் பணி நிறைவு பாராட்டு விழா





(இஸட்.ஏ.ஏ.றஹ்மான்
ஒலுவில் விசேட செய்தியாளர்)



ஒலுவில் அல்-ஜாயிஷா மகளிர் கல்லூரியில் பணியாற்றி 35 வருட கல்விச் சேவையை திறன்பட பூர்த்தி செய்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் இஸட்.கலீலுர் றஹ்மான் (சுடர் விடும் ஆளுமை) அவர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா 2025.07.20 ம் திகதி கல்லூரியின் ஆராதனை மண்டபத்தில் பாடசாலை சமூகத்தின் ஏற்பாட்டில் அதிபர் எஸ்.எம். பி.எம் அறூஸ் தலைமையில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது.
இதில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேஹ் ஏ.எம் றகுமத்துள்ளா விசேட அதிதியாக தென் கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் பதில் உபவேந்தர் யூ.எல்.ஏ.மஜீட் கௌரவ அதிதியாக வலயக் கல்விப் பிரதிப் பணிப்பாளர் ஏ.எச். பௌஸ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள்கல்வியலாளர்கள், அதிபர் இஸட்.கலீலுர் றஹ்மான் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அனுராதபுர மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

(எம்.ரீ. ஆரிப்)





அனுராதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமையில் வடமத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் (17) நடைபெற்றது.
இந்த கூட்டத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் தற்போதைய பிரச்சினைகள், அபிவிருத்தி நடவடிக்கைகள், கடந்த காலத்தில் அடைந்த முன்னேற்றம் மற்றும் புதிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப் பட்டது.
இந்நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச, பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க, அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சுசந்த குமார நவரத்ன , பேராசிரியர் சேன நானயக்கார , கருணா சிறி பலிஹேன ,பாக்ய ஸ்ரீ ஹேரத், திலின சமரக்கோன் வடமத்திய மாகாண பிரதான செயலாளர் வடமத்திய மாகாண அமைச்சு செயலாளர்கள் வடமத்திய மாகாண பிரதி பிரதம செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் நிறுவனத் தலைவர்கள் அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு துறை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



உக்குவளை அல்மினா ஆரம்ப பாடசாலையின் சிறுவர் பூங்கா அன்மையில் இப் பாடசாலையின் அதிபர் திருமதி எப். நிரோசியா அவர்களால் இப்பாடசாலை மாணவர்களின் பாவணைக்காகத் அன்மையில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக உக்குவளை பிரதேசசபை உதவித் தலைவர் எஸ்.எம்.ராபி கலந்து கொண்டதுடன் இப்பாடசாலை பிரதி அதிபர் , அஜ்மீர் பழைய மாணவர் சங்கம் மற்றும் இப்பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் , மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். அஜ்மீர் பழைய(1997) மாணவர் சங்கமும், அல்மினா ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி சங்கமும் இணைந்து இச்சிறுவர் பூங்காவை புனரமைப்பு செய்துகொடுத்திருந்தது

# கலாநிதிப் பட்டம் பெற்றார் எஸ்.ஏ.அஸீஸ்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



அமெரிக்காவிலுள்ள வொஷிங்டன் பல்கலைக்கழகத்தில் இருந்து எஸ்.ஏ. அஸீஸ் கலாநிதிப் பட்டம் (Honoris causa of Doctorate in commercial law ) பெற்றார்.
வரி மற்றும் வர்த்தக நிதி சட்டங்களில் இவர் விசேட தேர்ச்சிகளைப் பெற்றுள்ளதோடு, இவை சம்பந்தமாக பல ஆய்வுகளையும் (Research Works) செய்துள்ளார். இவரின் ஆக்கங்கள் பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளில் வெளியிடப்பட்டுள்ளன. இஸ்லாமிய நிதி தொடர்பான இவரின் ஆய்வுகள் இலங்கையின் முன்னணி ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தால் அஸீஸ் பட்டயக் கணக்கறிஞர் நிர்வாக ஆளுநர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார். கொழும்பில் கணக்காய்வு வரி மற்றும் முகாமைத்துவ ஆலோசனை நிறுவனத்தை நடத்திவரும் இவர், ஓர் இஸ்லாமிய நிதி ஆலோசகராகவும் செயற்படுகின்றார்.
அஸீஸ் கல்ஹின்னையைச் சேர்ந்த சிரேஷ்ட பட்டயக் கணக்கறிஞராவார். இவர் மர்ஹூம்களான எச்.எல்.எம். ஸாலிஹ் மற்றும் பாத்துமா பீவி ஆகியோரின் புதல்வராவார்.

# அதிவேக நெடுஞ்சாலையின் பொத்துஹெர – ரம்புக்கணை பிரிவின் பணிகள் ஆரம்பம்

(ரஷீத் எம். றியாழ் )



மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் பொத்துஹெர முதல் ரம்புக்கணை வரையிலான பிரிவின் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன, மேலும் பல பிரிவுகளுக்கான நிலம் செப்பனிடும் பணிகள் ஏற்கனவே இறுதி கட்டத்தில் உள்ளது. காபட் வேலைகளுக்கான ஒப்பந்ததாரர்கள் ஏற்கனவே டெண்டர் செயல்முறை மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர், என்றும் விரைவில் அவர்களுக்குரிய ஒப்பந்தங்கள் வழங்கப்படும். என்றும் தெரிவிக்கப்படுகிறது.
2027 ஜனவரி மாதத்துக்குள் இந்த வீதிப் பணிகள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

# கண்டி நகர நடைபாதைகளிலுள்ள வியாபாரிகளை அகற்ற கண்டி மாநகரசபையில் தீர்மானம்



(ரஷீத் எம். றியாழ்)

கண்டி நகர நடைபாதைகளை ஆக்கிரமித்துள்ள வியாபாரிகளை அகற்ற கண்டி மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.
கண்டி மாநகர சபையின் இரண்டாவது அமர்வு (18) மேயர் சந்திரசிறி விஜேநாயக்க தலைமையில் கூடியது. இக் கூட்டத்தில், சர்வ ஜன பலய கட்சி உறுப்பினர் ரோஹித லால் தர்மசிறி, இந்த பிரேரணையை கொண்டு வந்தார். ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இந்த பிரேரணைக்கு ஆதரவாக கைகளை உயர்த்தினர்.
இதனடிப்படையில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

# சிரியா மீதான இஸ்ரேல் தாக்குதல்; அச்சத்திலுள்ள மத்திய கிழக்கு நாடுகள்!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

சிரியாவின் ஸ்வேய்தா மாகாணத்தில் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தம் முறிந்ததைத் தொடர்ந்து, அந்த நாட்டு ராணுவ தலைமையகம் உள்ளிட்ட பகுதிகளில் இஸ்ரேல் தீவிர தாக்குதல் நடத்தியது. சிரியாவின் தெற்கு நகரமான ஸ்வேய்தாவில், அரசுப் படைகளுக்கும் துரூஸ் ஆயுதக் குழுக்களுக்கும் இடையே செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தம் முறிந்தது. இதைத் தொடர்ந்து, புதன்கிழமை மோதல்கள் தீவிரமடைந்தன.இதில் துரூஸ் சிறுபான்மை இனத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இஸ்ரேல் ராணுவம் டமாஸ்கஸில் உள்ள சிரிய ராணுவ தலைமையகத்தின் நுழைவாயிலை தாக்கியதுடன், பின்னர் மற்றொரு பெரிய தாக்குதலை நடத்தியது. மோதல் தொடங்கியதிலிருந்தே தெற்கு சிரியாவில் அரசுப் படைகளின் வாகனங்களைக் குறிவைத்து இஸ்ரேல் தொடர் வான்தாக்குதல்களை நடத்திவருகிறது. அத்துடன், எல்லைப் பகுதியில் சிரியா தனது படைகளை வலுப்படுத்தியுள்ளது. இதற்கிடையே, ஸ்வேய்தாவில் உள்ள துரூஸ் பெரும்பான்மைப் பகுதியில் உள்ள ஆயுதக் குழுக்கள்தான் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தத்தை மீறியதாகவும், இதனால் அரசுப் படைகள் பதிலடி தாக்குதல் நடத்தியதாகவும் சிரியா பாதுகாப்பு அமைச்சகம் கூறியது.

“அந்தப் பகுதியில் வசிப்பவர்களைப் பாதுகாக்கவும், நகரை விட்டு வெளியேறியவர்கள் பாதுகாப்பாக திரும்புவதை உறுதி செய்யவும், உரிய விதிகளைப் பின்பற்றி பதிலடி கொடுக்கப்பட்டதாக அமைச்சகம் தெரிவித்தது.

இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், “‘ஸ்வேய்தா பகுதியிலிருந்து சிரியா அரசுப் படைகள் வெளியேறும் வரை தாக்குதல்கள் தொடரும் இது அரசுக்குப் புரியவில்லை என்றால், தாக்குதலின் தீவிரம் மேலும் அதிகரிக்கப்படும்’ என்று எச்சரித்தார்.

கடந்த டிசம்பரில் இஸ்லாமிய கிளர்ச்சிக் குழுக்களின் தாக்குதலால் சிரியாவை நீண்டகாலம் ஆண்டு வந்த பஷார் அல்-அஸாத் பதவியை இழந்து ரஷியாவில் தஞ்சமடைந்தார். அதைத் தொடர்ந்து, 14 ஆண்டுகால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

ஆனால், புதிய ஆட்சியாளர்கள் நாட்டைக் கட்டுப்படுத்துவதில் சவால்களை எதிர்கொண்டுள்ளனர். பெரும்பான்மையாக உள்ள சன்னி பிரிவு முஸ்லிம்களைக் கொண்ட புதிய அரசில், அஸாத் சார்ந்துள்ள அலாவி சிறுபான்மையினருடன் பிற ஆயுதக் குழுக்கள் கடந்த மார்ச் மாதம் மோதலில் ஈடுபட்டனர். அப்போது அரசுப் படைகள் உதவியுடன் நூற்றுக்கணக்கான அலாவி இன மக்கள் கொல்லப்பட்டனர். இது, சிரியாவின் பிற சிறுபான்மை இனத்தவர் இடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மற்ற,இந்தச் சூழலில், தெற்கு மாகாணத்தில் உள்ளூர் சன்னி பிரிவு பெதுயின் பழங்குடிகளுக்கும் துரூஸ் ஆயுதக் குழுக்களுக்கும் இடையே பரஸ்பர கடத்தல்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்தன. அதையடுத்து, சட்டம், ஒழுங்கை மீட்டெடுப்பதற்காக அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்ட அரசுப் படைகள், துரூஸ் குழுக்களுடன் மோதலில் ஈடுபட்டன.

இந்த மோதலில் 30 பேர் உயிரிழந்ததாக உள்துறை அமைச்சகம் திங்கள்கிழமை கூறினாலும், அதற்குப் பிந்தைய புள்ளிவிவரங்கள் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை.

பிரிட்டனில் இருந்து செயல்படும் சிரியா மனித உரிமைகள் அமைப்பு கூறுகையில், புதன்கிழமை காலை வரை 250-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும், இதில் 4 குழந்தைகள், 5 பெண்கள், 138 பாதுகாப்பு படையினர் அடங்குவதாகவும் தெரிவித்தது.

இந்தச் சூழலில், துரூஸ் இனத்தவருக்கு ஆதரவாக சிரியா ராணுவ தலைமையகம் உள்ளிட்ட பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஏற்கெனவே, பஸர் அல்-அஸாத் ஆட்சி கவிழ்ந்த பிறகு இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களால் தங்களது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்று கூறி, சிரியா ராணுவ நிலைகள் மீது இஸ்ரேல் தீவிர தாக்குதல் நடத்தியது நினைவுகூரத்தக்கது. அத்துடன், ஐ.நா. கண்காணிப்பில் உள்ள கோலன் குன்றுகள் பகுதியில் உள்ள பாதுகாப்பு மண்டலத்தையும் அந்த நாடு கைப்பற்றியது.

துரூஸ் என்பது ஷியா இஸ்லாத்தின் இஸ்மாயிலியப் பிரிவிலிருந்து கடந்த 10-ஆம் நூற்றாண்டில் துரூஸ் மதப் பிரிவு தோன்றியது. உலகளவில் சுமார் 10 லட்சம் துரூஸ் மக்கள் உள்ளனர். இதில் பாதிக்கும் மேல் சிரியாவில் வாழ்கின்றனர். மற்றவர்கள் லெபனான், இஸ்ரேல் மற்றும் 1967-இல் இஸ்ரேல் கைப்பற்றி 1981-இல் இணைத்துக்கொண்ட கோலன் மலைக் குன்று உள்ளிட்ட பகுதியில் வாழ்கின்றனர்.

பாலஸ்தீனத்தில் அரபு தேசியவாதிகளால் துரூஸ் மக்கள் துன்புறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக, 1948-ஆம் ஆண்டில் இஸ்ரேல் உருவானபோது அந்த நாட்டுக்கு ஆதரவாக துரூஸ் இனத்தவர் சண்டையிட்டனர். அதற்குக் கைமாறாக, சிரியாவில் உள்ள துரூஸ் இனத்தவருக்கு ஆதரவாக இஸ்ரேல் ராணுவம் தற்போது தாக்குதல் நடத்திவருகிறது.

ஸ்வேய்தா பகுதியிலிருந்து சிரியா அரசுப் படைகள் வெளியேறும் வரை தாக்குதல்கள் தொடரும் இது அரசுக்குப் புரியவில்லை என்றால், தாக்குதலின் தீவிரம் மேலும் அதிகரிக்கப்படும்’

இஸ்ரேல் ராணுவம் மற்றும் அதன் வலிமையான போர் தாக்குதல் காரணமாக மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பதட்டம் ஏற்படுத்தி உள்ளது. இந்த பதட்டம் அதிகரித்து வரும் நிலையில் துருக்கி மற்றும் அரபுகள் இடையேயான பதட்டம் மேலும் அதிகரிக்கும் வகையில் வரும் காலங்களில் மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரான் சிரியா தாக்குதலை மிகவும் கடுமையாக கண்டித்து வரும் நிலையில் இஸ்ரேல் ராணுவ நடவடிக்கைகளை எல்லை மீறி செல்வதை துருக்கி தனது கடுமையான கண்டத்தின் மூலம் உறுதி செய்து உள்ளதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

அதேநேரத்தில் துருக்கி மற்ற அரபு நாடுகளான சவூதி, ஜோர்டான் ஆகிய உடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அதேநேரத்தில் அமெரிக்கா வெளிவிவகார துறை அமைச்சர் மார்க்கோ ரூபியோ இது புரிந்து கொள்ள முடியாத நிலையில் இந்த தாக்குதல் நடந்து இருப்பதாக பூசி மெழுகி பேசியுள்ளார்.

இதற்கிடையில் ஈரான் சிரியா நாட்டிற்கு தனது முழுமையான ஆதரவை வழங்கி இருக்கிறது. சில மாதங்களுக்கு முன் சிரியா அதிபர் அபூ முஹம்மது அல் கோலனி சவுதி மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் சென்று அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உடன் பேச்சுவார்த்தை நடத்தி பல பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு சிரியாவில் புதிய முதலீடுகளை கொண்டு வரும் அளவுக்கு நிலைமை மாறியது.

அதேநேரத்தில் சிரியா அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் 2017 ம் ஆண்டு கொண்டு வந்து ஆப்ரஹாம் அக்கார்டு ஒப்பந்தத்தில் தன் நாட்டை இணைத்து கொள்ள முன்வந்த நிலையில் தான் இஸ்ரேல் 160 க்கு மேற்பட்ட சிரியாவின் நிலைகளில் பயங்கர தாக்குதலை நடத்தி இருப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது

சிரியா கடந்த காலங்களில் ஈரானின் ஆதரவு பெற்ற ஷியா பிரிவு தலைமையில் அதாவது பஷர் அல் ஆஷாத் நடைபெற்ற நிலையில் தற்போது அமெரிக்கா ஆதரவுடன் புதிய ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் இஸ்ரேல் அமெரிக்கா வின் ஒப்புதலை பெறாமல் எப்படி தாக்குதலை முடியும் என்பது போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய கேள்விகள் பொது களத்தில் அதாவது சர்வதேச நாடுகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது தவிர்க்க ஒன்று என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

தற்போதைய கொதி நிலை அரசியல் மூல காரணம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு வின் வரம்பற்ற நடவடிக்கைகள் தான் என்று பல்வேறு உலக நாடுகள் மத்தியில் கருத்துக்கள் வலுவான எழுந்துள்ளது. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு நாடு பிடிக்கும் ஆசை என்பது அவரது நாற்காலி கனவு திட்டத்தில் ஒரு பகுதியாகவே இருந்து வருகிறது. அதாவது 120 உறுப்பினர்கள் கொண்ட இஸ்ரேலின் நெட்ஸ் சபையில் கூட்டணி கட்சிகள் உடனான ஆதரவினை பெற்று அதாவது 68 உறுப்பினர்கள் மட்டுமே ஆதரவுடன் இது வரை ஆட்சி நடத்தி வந்த நிலையில் இஸ்ரேல் பிரதான கட்சிகளான ருவுது மற்றும் ஷாஸ் ஆகிய இரண்டு அரசியல் கட்சிகள் பெஞ்சமின் நிதான்யாகு வின் லீக்குடு கட்சிக்கான தங்கள் ஆதரவை விலக்கிக் கொண்ட நிலையில் தற்போது பெஞ்சமின் நிதான்யாகு வெறும் 50 எம் பி க்கள் உடன் வலிமை இல்லாத அதாவது மைனாரிட்டி அரசாக மாறியது குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப காலங்களில் இருந்தே போரின் மூலம் எல்லாவற்றையும் அதாவது அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உடைய முழுமையான ஆதரவைப் பெற்று மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் மிகப் பெரிய வல்லரசு நாடாக வலம் வரலாம் என்று நம்பியது. அதற்க்கு மூல காரணம் அமெரிக்கா வுக்கு இஸ்ரேல் என்ற ஒரு நாடு நிச்சயமாக தேவை என்பதே யதார்த்தமான நிலையாகும். ஆகவே இஸ்ரேலிய நாட்டை அமெரிக்கா எந்த விகிதத்திலும் விட்டு கொடுத்து அரசியல் செய்ய முன் வராதே இதற்கு முக்கிய காரணமாகும்.




தற்போதைய நிலையில் ஈரான், இஸ்ரேல் இடையேயான போரில் ஈரான் மகத்தான வெற்றி பெற்று இருப்பதாக உச்ச பட்ச அரசியல் தலைவர் செய்யத் அலி கொமேய்னி நேற்று முன்தினம் வழங்கிய சுயாதீன செவ்வியின் ஊடகா உறுதி செய்து உள்ளார்.ஈரான் வெற்றி அதன் மனவலிமை மற்றும் உறுதியான நடவடிக்கைகள் மூலம் ஏற்பட்டது என்று கூறினார். அதே சமயம் இஸ்ரேல் என்கிற வெறி பிடித்த நாயை அமெரிக்கா அரசு தனது சங்கிலியால் கட்டப்பட்டு இருக்கும் நிலையில் தேவை ஏற்படும் நிலையில் ஏவி விடும் என்று கூறினார்.

ஆக மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் போர் பதட்டம் அதிகரித்து வரும் நிலையில் இதற்கு முடிவு என்பது பாலஸ்தீன காசா போர் மண்டலத்தின் அமைதி மற்றும் விடுதலை அடிப்படையில் தான் அமையும் என்பதை பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் சுட்டி காட்டியயதை நாம் இங்கு சுட்டிக் காட்டுவதே சாலச் சிறந்த தீர்வாக அமையும் என்பதே நிதர்சனமான உண்மை நிலையாகும்.

# உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்ற பேருவளை நகர சபை புதிய தலைவர்..!




(பேருவளை பீ.எம். முக்தார்)

பேருவளை நகர சபையின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட முஹம்மத் அஸாஹிர் முஹம்மத் மபாஸிம் 21ஆம் திகதி காலை பேருவளை நகர சபை அலுவலகத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுகொண்டார்.புதிய தலைவருக்கு இதன் போது நகர சபை ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்கள், பொது மக்களினாள் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

நகர சபை பூமியை வந்தடைந்த தலைவருக்கு வெற்றிலை கொடுத்து மலர் மாலை அனிவித்து வரவேற்றமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மக்கள் சக்தி சார்பில் நகர சபைக்கு தெரிவான இவர் புதிய தலைவர் தெரிவில் கூடுதலான வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்டார்.

பேருவலை நகர சபையின் வரலாற்றில் முதல் தடவையாக இளம் வயதுடைய நகர பிதாவாகவும் ஒரு சாதாரன குடும்பத்தைச் சேர்ந்தவருமான ஒருவர் இப்பதவியில் அமர்வது விசேட அம்சமாகும்.

இந்த நிகழ்வில் மஸ்ஸல பௌத்த விகாராதிபதி சங்கைக்குறிய ரம்புக்பிடிய ஸாஸனரத்ன தேரோ உட்பட விகாராதிபதிகள், சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் பிரதம இமாம் கலீபதுஷ் ஷாது மௌலவி எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி), கதீப் மௌலவி தீன் முஹம்மத் (மஹ்லரி) களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பேருவளை அபிவிருத்திக் குழு தலைவருமான சந்திம ஹெட்டியாராச்சி, பேருவளை ஐக்கிய மக்கள் சக்தி பிரதம அமைப்பாளர் அல் ஹாஜ் இப்திகார் ஜமீல், களுத்துறை, மாவட்ட அழைப்பாளர் எம்.எம். எம். அம்ஜாத், களுத்துறை மாவட்ட அமைப்பாளர் சட்டத்தரணி மஹேஷ், நகர சபை உப தலைவர் விமல சிறி சில்வா, பேருவளை பிரதேச செயலாளர் ஜானக பெரேரா, நகர சபை செயலாளர் திருமதி டப்லியு. குணவர்தண பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஆர் நவரத்ண நகர பிதாவின் குடும்ப உறுப்பினர்கள், நகர சபை முன்னாள் தலைவரும் உறுப்பினருமான மஸாஹிம் முஹம்மத், நகர சபை உறுப்பினர்கள் உட்பட நகர சபை அதிகாரிகள், தேசிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக் குழு தலைவருமான அரூஸ் அஸரத், தேசிய மக்கள் சக்தி பேருவளை அமைப்பாளர் ரம்ஸான் சிஹாப்தீன், சீனன் கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்க செயலாளர் அஷ்கர் முபாரக் உட்பட உறுப்பினர்கள், பேருவளை வர்த்தகர் சங்க தலைவர் உட்ப உறுப்பினர்கள், பளன்ளிவாசல் நிர்வாகிகள், சமூக நல அமைப்புக்களின்



பிரதிநிதிகள், அரச அதிகாரிகள். தேசிய மக்கள் சக்தி முக்கியஸ்தர்கள், அரசியல்வாதிகள் உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

புதிய நகர பிதா கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பைதுல் முபாரக் வதாரூல் முஸ்தபா புகாரித் தக்கியாவிற்கும் விஜயம் செய்தார். அவருடன் பாராளுமன்ற உறுப்பினர் சத்டிம ஹெட்டியாரச்சி ஐக்கிய மக்கள் சக்தி பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜமீலும் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. அங்கு காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குறிய சேஹ் நாயகம் அவர்களையும் சந்தித்தார்.

நகர பிதா வரலாற்றுப் புகழ் மிகு கெச்சிமலை தர்காவுக்கும் ஏற்கனவே விஜயம் செய்து அங்கு சங்கைக்குறிய சேஹ் நாயகத்தையும் சந்தித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற டி.அப்துல் கலாம்




(உக்குவளை ஜெலீல்)

உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையில் சுமார் 37 வருட காலம் ஆசிரியராகவும் பின்னர் 6 வருடங்கள் பிரதி அதிபராகவும் கடமையாற்றிய டி.அப்துல் கலாம் கடந்த 9 ந்திகதியன்று தனது பணியிலிருந்து ஓய்வு பெற்று கொண்டார். இதன்நிமித்தம் அவருக்கான பிரியாவிடை நிகழ்வு இப்பாடசாலையின் தற்போதைய அதிபராகக் கடமைபுரிந்துவரும் திருமதி சகுந்தலா சிவநேசன் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் இப்பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுவினர் முகாமைத்துவக் குழுவினர் , பழைய மாணவர் சங்கத்தினர் ஆசிரியர் ஆசிரியைகள், மாணவர்கள் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் உறுப்பினராக கற்பிட்டியின் சிரேஷ்ட ஊடகவியலாளர் சியாஜ் நியமனம்




கற்பிட்டி பெரிய குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் எம் எச் எம் சியாஜ் சர்வதேச மனித உரிமைகள் ஸ்தானத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கற்பிட்டி பிரதேசத்தில் கடந்த 25 வருடங்களாக ஊடகவியலாளராக சேவையாற்றி வருவதுடன் எம் எஸ் மீடியா நெட்வொர்கின் நிறைவேற்று பணிப்பாளராகவும். கற்பிட்டி தமிழ் கலை இலக்கிய மன்றத்தின் செயலாளராகவும் சமூக சேவைகள் செயற்பாட்டாளராகவும் சேவையாற்றுகிறார்.

கற்பிட்டி பெரிய ஜூம்ஆ பள்ளிவாசலின் முன்னாள் செயலாளரான இவர் சித்தி ஜூ வைரியா மர்ஹூம் ஹனிபா தம்பதிகளின் இளைய புதல்வராவார்.

# மௌலவி ஆசிரியர் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கல்வியமைச்சு செயலாளரிடம் உதுமா லெவ்வை எம்.பீ.வேண்டுகோள்

(கே எ ஹமீட்)

அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.எம்.ஜீ.எஸ்.நாலக களுவெவ ஆகியோருக்கிடையில் சந்திப்பு (21.07.2025) கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை.

நமது நாட்டில் மௌலவி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படாத நிலையில் 1992 ம் ஆண்டு 295 மௌலவி நியமனங்கள் வழங்கப் பட்டன. இதன் பிறகு 18 வருடங்கள் கழித்து 2010 ம் ஆண்டு 120 மௌலவி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.15 வருடங்கள் சென்ற நிலையில் இதுவரையும் நமது நாட்டில் மௌலவி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படாத நிலைமை தொடர்கின்றன. இதனால் நமது நாட்டில் முஸ்லிம் பாடசாலைகளில் மௌலவி ஆசிரியர் பற்றாக்குறையுடன் செயற்பட்டு வருகின்றன. எனவே ஆசிரியர் நியமனங்கள் வழங்கப் படுகின்ற போது இலங்கையில் மௌலவி ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.எம்.ஜீ.எஸ்.நாலக களுவெவவிடம் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை.

நமது நாட்டில் 321 அரபுக்கல்லூரிகள் இலங்கை கலாசார அமைச்சினால் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டு வருகின்றன. இவ் அரபுக்கல்லூரிகளில் இருந்து ஒவ்வொரு வருடமும் சுமார் 500 க்கும் மேற்பட்ட மௌலவிமார்கள்



பட்டம் பெற்று வெளியே வருகின்றனர். பட்டம் பெற்று வெளியேறிய மௌலவிமார்களில் பட்டங்களை நிறைவு செய்ததுடன் GCE O/L, GCE A/L பரீட்சைகளில் தோற்றி சித்தி அடைந்துள்ளனர். அத்துடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அல்-ஆலிம் ஆரம்பப் பகுதி, இறுதிப் பகுதி பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளனர். நமது நாட்டில் உள்ள பாடசாலைகளில் அரபு, இஸ்லாம் பாடத்திற்கு வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிலவி வருகின்றன. இவ் வெற்றிடங்களுக்கு முதல் கட்டமாக ஒரு தொகை மௌலவி ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் 2020 ம் ஆண்டுக்குப் பிறகு நடாத்தப்படாமல் உள்ள அல்-ஆலிம் பரீட்சையினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக பதிலளித்த கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.எம்.ஜீ.எஸ்.நாலக களுவெவ. எதிர்காலத்தில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் போது மௌலவி ஆசிரியர் நியமனங்கள் தொடர்பாக கருத்தில் கொள்வதாகவும் அல்-ஆலிம் பரீட்சை நடாத்துவது குறித்து மேல் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

## மனநலமும் ஆலோசனையும் 83

# பெண் தோழிகள் ஒன்றுகூடல்

இதயங்களை உயிர்ப்பிப்பதற்காக,
நம்முடைய வேகமான வாழ்க்கையில் ஒரு புனித இடைவேளையை ஏற்படுத்துவதற்காக,
நம்மையும் நமது உறவையும் மறுபரிசீலனை செய்யும் தருணமாக ஆக்கிக் கொள்ள தோழிகள் ஒன்று கூடுகின்றனர்.

நண்பிகள் என்பது வெறும் தோழிகள் அல்ல – அவர்கள் ஒரு கண்ணாடி, ஒரு நங்கூரம், ஒரு உயிர்க்கயிறு.

நண்பிகள் ஒன்றுகூடும் இடத்தை உண்மையான அன்பு இருக்கும் இடமாக,
பரிசுத்தமான வார்த்தைகள் பேசப்படும் இடமாக,
நம்பிக்கையை வளர்க்கும் இடமாக
அமைத்துக் கொண்டால் அதுவே ஒன்றுகூடலை உயிர்ப்பிக்கும் இடமாக ஆக்கிவிடும்.

தோழிகளின் சந்திப்பு
"என்ன செய்திகள்", "எப்படி சுகமா?"
என்று கேட்டுவிட்டு பிரிந்து போகும் சந்திப்பாக இருக்கக் கூடாது.
உள்ளங்கள் இணைந்த சந்திப்பாக,
உறவுகள் வலுப்படும் சந்திப்பாக,
புன்னகையும் பிரார்த்தனைகளும் ஒலிக்கின்ற சந்திப்பாக
இருக்க வேண்டும்.

உங்கள் ஒன்றுகூடல் அர்த்தமுள்ளதாக இருக்க சில ஆலோசனைகளை இங்கு முன்வைக்கிறோம். விரும்பினால் உங்கள் நிகழ்ச்சியில் இவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

– ஒன்று கூடலுக்கு ஒரு தலைப்பை, கருப்பொருளை உருவாக்கலாம்.

உதாரணம்:
"நினைவிடும் சகோதரிகள்",
"நன்றியின் வட்டம்"
"மகிழ்ச்சியும் மாலை நேரமும்" – இப்படி உங்களுக்கு பிடித்ததை உருவாக்கலாம்.

– அன்றாட வாழ்வியலுடன் கூடிய 10-15 நிமிட இஸ்லாமிய நினைவூட்டலை நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளலாம். இதை உங்களில் ஒருவரே செய்யலாம். அல்லது துறைசார்ந்த ஒருவர் மூலம் செய்யலாம். இது நிகழ்வின் உணர்வுத் தூணாக ஆகிவிடும்.

– ஒரு நினைவுப் பரிசு கொடுக்கலாம்.
துஆ அட்டை, ஹதீஸ் புக்மார்க், நட்டு வளர்க்க கூடிய விதை இப்படி
ஒரு எளிய பரிசை ஒவ்வொருவருக்கும் கொடுக்கலாம்.

– வந்தோம், சந்தித்தோம், சாப்பிட்டோம் என்றில்லாமல்
ஒரு சேவை செய்ய ஏற்பாடு செய்யலாம்.
அங்கே புத்தகம் தானம் செய்யலாம்,
வறியவர்களுக்கு ஏதேனும் வழங்கலாம்.

– நிகழ்வு முடிவில், அனைவரும் ஒரே வட்டத்தில் அமர்ந்து,
அமைதியாகவோ அல்லது ஒலி எழுப்பியோ ஒருவருக்கொருவர் துஆ செய்யலாம். இங்கு தான் இதயங்கள் உருகும், "தான்" எனும் உணர்வு நீங்கும்.
ஆழ்ந்த ஆறுதல் ஏற்படும்.

– ஏற்பாட்டாளர்கள் முடிந்தவரை ஒவ்வொரு வருகையாளரையும் அவரவர் பெயர் கூறி வரவேற்கலாம்.
புதியவர்கள், மற்றும் வெகு நாட்களுக்குப் பிறகு வருபவர்களை எல்லோருக்கும் அறிமுகம் செய்யலாம்.

ஒருவரின் உடை, வருமானம், பிள்ளைகள், வாழ்க்கை முறைகளை ஒப்பிட்டு நோக்காதவாரு நடந்துகொள்ள மறைமுகமாக நினைவுபடுத்தலாம்.

ஆடம்பரத்தை தவிர்த்து எளிமையான ஒன்றுகூடலாக அமைத்துக்கொள்ள திட்டமிட்டுவது முக்கியமாகும்.

ஏற்பாட்டாளர்கள் இந்த ஏற்பாடுகள் பற்றி இறைவனிடம் நாளை பதில் சொல்ல கடமைப்பட்டிருப்பதால் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.

தோழிகளின் ஒன்று கூடல்
நினைவில் நிறைந்த,
இதயங்களை அணைத்து,
ஆன்மாவை உயிர்ப்பிக்கும்
நிகழ்வாக இருக்கட்டும்.


சந்திப்பு முடிந்து போகும் தருவாயில்
"அடுத்த தடவை சந்திப்போம்" என்று சொல்வதைவிட
"நாங்கள் சுவனத்திலும் சந்திப்போம், இன்ஷா அல்லாஹ்" என்று இருமுனைக் கூரலுடன் பிரிந்து போகலாம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




பயாஸா பாஸில்



# கணவனிடம் மனைவி எதிர்பார்ப்பது என்ன?

அன்பாக, பிரியமாக இருக்க வேண்டும்.
மனது புண்படும்படி பேசக்கூடாது.
கோபப் படக்கூடாது.
சாப்பாட்டில் குறை சொல்லக்கூடாது.
பலர் முன் திட்டக்கூடாது.
எந்த இடத்திலும் மனைவியை விட்டு கொடுக்கக்கூடாது.
முக்கிய விழாக்களுக்கு சேர்ந்து போக வேண்டும்.
மனைவியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.
சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும்.
மனைவியின் கருத்தை ஆதரிக்க வேண்டும், மதிக்க வேண்டும்.
வித்தியாசமாக ஏதாவது செய்தால் ரசிக்க வெண்டும். பாராட்ட வேண்டும்.
பணம் மட்டும் குறிக்கோள் அல்ல. குழந்தை, குடும்பம் இவற்றிற்கும் உரிய முக்கியத்துவம் தந்து நடந்து கொள்ள வேண்டும்.
வாரம் ஒரு முறையாவது. மனம் விட்டுப் பேச வேண்டும்.
மாதம் ஒரு முறையாவது வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும்.
ஆண்டுக்கு ஒரு முறையாவது சுற்றுலா செல்ல வேண்டும்.
பிள்ளைகளின் படிப்பைப் பற்றி அக்கறையுடன் கேட்க வேண்டும்.
ஒளிவு, மறைவு கூடாது.
மனைவியை நம்ப வேண்டும்.
முக்கியமானவற்றை மனைவியிடம் கூற வேண்டும்.
மனைவியிடம் அடுத்த பெண்ணை பாராட்டக் கூடாது.
அடுத்தவர் மனைவி அழகாக இருக்கிறாள் என்று எண்ணாமல் தனக்குக் கிடைத்ததை வைத்து சந்தோசப்படவேண்டும்.
தனக்கு இருக்கும் கஷ்டம் தன் மனைவிக்கும் இருக்கும் என்று எண்ண வேண்டும்.
உடல் நலமில்லாத போது உடனிருந்து கவனிக்க வேண்டும்.
சின்ன, சின்னத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.
சிறு சிறு உதவிகள் செய்ய வேண்டும்.
குழந்தைகள் அசிங்கம் செய்து விட்டால் "இது உன் குழந்தை" என்று ஒதுங்கக்கூடாது.
அம்மாவிடம் காட்டும் பாசத்தை, மனைவியிடமும் காட்ட வேண்டும்.
ஏனென்றால் மனம் சலிக்காமல் அம்மாவை விட, அக்கா, தங்கையை விட அதிகமாக கவனிக்க கூடியவள் மனைவி.
நேரத்திற்குச் சாப்பிட வேண்டும்.
சாப்பாடு வேண்டுமென்றால் முன் கூட்டியே சொல்ல வேண்டும்.
எங்கு சென்றாலும் மனைவியிடம் சொல்லி விட்டு, சொல்ல வேண்டும்.
சொன்ன நேரத்திற்கு வர வேண்டும்.
எப்போதும் வீட்டு நினைப்பு வேண்டும்.
மனைவியின் பிறந்த நாள் தெரிய வேண்டும்.
மனைவிக்குப் பிடித்தவற்றை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
பொய், சூது, மது, மாது போன்ற தீய பழக்கங்கள் கூடாது.
மனைவி வீட்டாரை குறை சொல்லக்கூடாது.
கைச் செலவுக்கு பணம் தர வேண்டும்...
இதைத்தான் எல்லா மனைவிகளும் எதிர்பார்க்கிறார்கள் தன் கணவனிடம்...!!




# கணவனிடம் மனைவி எதிர்பார்ப்பது என்ன...?

அன்பாக, பிரியமாக இருக்க வேண்டும்.
மனது புண்படும்படி பேசக்கூடாது.
கோபப்படக்கூடாது.
சாப்பாட்டில் குறை சொல்லக்கூடாது.
பலர் முன் திட்டக்கூடாது.
எந்த இடத்திலும் மனைவியை விட்டு கொடுக்கக்கூடாது.
முக்கிய விழாக்களுக்கு சேர்ந்து போக வேண்டும்.
மனைவியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.
சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும்.
மனைவியின் கருத்தை ஆதரிக்க வேண்டும், மதிக்க வேண்டும்.
வித்தியாசமாக ஏதாவது செய்தால் ரசிக்க வெண்டும். பாராட்ட வேண்டும்.
பணம் மட்டும் குறிக்கோள் அல்ல. குழந்தை, குடும்பம் இவற்றிற்கும் உரிய முக்கியத்துவம் தந்து நடந்து கொள்ள வேண்டும்.
வாரம் ஒரு முறையாவது. மனம் விட்டுப் பேச வேண்டும்.
மாதம் ஒரு முறையாவது வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும்.
ஆண்டுக்கு ஒரு முறையாவது சுற்றுலா செல்ல வேண்டும்.
பிள்ளைகளின் படிப்பைப் பற்றி அக்கறையுடன் கேட்க வேண்டும்.
ஒளிவு, மறைவு கூடாது.
மனைவியை நம்ப வேண்டும்.
முக்கியமானவற்றை மனைவியிடம் கூற வேண்டும்.
மனைவியிடம் அடுத்த பெண்ணை பாராட்டக்கூடாது.
அடுத்தவர் மனைவி அழகாக இருக்கிறாள் என்று எண்ணாமல் தனக்குக் கிடைத்ததை வைத்து சந்தோசப்படவேண்டும்.
தனக்கு இருக்கும் கஷ்டம் தன் மனைவிக்கும் இருக்கும் என்று எண்ண வேண்டும்.
உடல் நலமில்லாத போது உடனிருந்து கவனிக்க வேண்டும்.
சின்ன, சின்னத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.
சிறு சிறு உதவிகள் செய்ய வேண்டும்.
குழந்தைகள் அசிங்கம் செய்து விட்டால் "இது உன் குழந்தை" என்று ஒதுங்கக்கூடாது.
அம்மாவிடம் காட்டும் பாசத்தை, மனைவியிடமும் காட்ட வேண்டும்.
ஏனென்றால் மனம் சலிக்காமல் அம்மாவை விட, அக்கா, தங்கையை விட அதிகமாக கவனிக்க கூடியவள் மனைவி.
நேரத்திற்குச் சாப்பிட வேண்டும்.
சாப்பாடு வேண்டுமென்றால் முன் கூட்டியே சொல்ல வேண்டும்.
எங்கு சென்றாலும் மனைவியிடம் சொல்லி விட்டு, சொல்ல வேண்டும்.
சொன்ன நேரத்திற்கு வர வேண்டும்.
எப்போதும் வீட்டு நினைப்பு வேண்டும்.
மனைவியின் பிறந்த நாள் தெரிய வேண்டும்.
மனைவிக்குப் பிடித்தவற்றை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
பொய், சூது, மது, மாது போன்ற தீய பழக்கங்கள் கூடாது.
மனைவி வீட்டாரை குறை சொல்லக்கூடாது.
கைச் செலவுக்கு பணம் தர வேண்டும்...
இதைத்தான் எல்லா மனைவிகளும் எதிர்பார்க்கிறார்கள் தன் கணவனிடம்...!!






நாச்சியாதீவு பர்வீன்

# “தெற்கில் உதித்த சூரியன்”

**கடந்த வார தொடர்ச்சி...**

(தமிழ் மாமணி அஷ்ரப் சிஹாப்தீனின் எனக்குள் நகரும் நதி”யிலிருந்து...2014 இல் எழுதப்பட்ட கட்டுரை மர்ஹூம் எம்.எச்.எம். ஷம்ஸ் மறைந்து இப்போது 23 வருடங்கள் அவரின் நினைவாக இக்கட்டுரை சிறிய திருத்தத்துடன் மீள் பிரசுரம் செய்யப்படுகிறது)

**– அஷ்ரப் சிஹாப்தீன் –**

மர்ஹூம் எம்.எச்.எம். ஷம்ஸ் மறைந்து 23 வருடங்கள் தாண்டிய பின்னர் சமூகத்தில் அவரது இழப்பு ஏற்படுத்திய இடைவெளியின் விசாலம் உணர்ந்து “தெற்கில் உதித்த சூரியன்“ என்று இப்பத்திக்குத் தலைப்பிட்டிருக்கிறேன். 15.07.2002 அன்று இவ்வுலகை நீத்த அவர்கள் பற்றி அன்னாரது பத்திரிகைத் தோழரான சிதம்பரப் பிள்ளை சிவகுமார் ஆற்றிய நினைவுரையை “யாத்ரா“ பத்தாவது இதழில் பிரசுரித்து அதற்குத் “தெற்கில் மறைந்த சூரியன்“ என்று தலைப்பிட்டிருந்தேன்.

20 வருடங்களுக்கு முன்னர் அவர் தொகுத்து வைத்திருந்த அவரது சிறுகதைத் தொகுதி “வளவையின் மடியிலே“ என்ற மகுடத்தில் கடந்த 2.11.2014 அன்று அவரது புத்திரரான பத்திரிகையாளர் பாஹிமின் முயற்சியால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

ஓர் ஆசிரியராக, கவிஞராக, கலைஞராக, சிறுகதையாளராக, நாவலாசிரியராக, பாடலாசிரியராக, பாடகராக, பத்திரிகை ஆசிரியராக, சமூகப்போராளியாக என்று ஏகப்பட்ட பக்கங்களுடன் ஓயாமல் உறங்காமல் உழைத்த சகலகலா விற்பன்னர்தான் எம்.எச்.எம். ஷம்ஸ் அவர்கள்.

ஒரு தனிமனித இயக்கமாக நின்று சமூகத்தளத்திலும் இலக்கியத் தளத்திலும் இவரைப் போன்று இயங்கிய ஒருவரைக் கடந்த காலமும் கண்டிருக்கவில்லை, நிகழ்காலமும் காண்பதாய் இல்லை. இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக எழுப்பப்படும் விமர்சனங்களுக்கும் சவால்களுக்கும் இன்று முஸ்லிம் சமூகத்திலிருந்து குழு ரீதியான முறைமையிலேயே பதில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. வாழ்ந்த காலம் முழுவதும் இதை அவர் தனியொருவனாய்த் தைரியமாய்ச் செய்து வந்தார்.

அவர் ஈடுபட்ட துறைகள் எல்லாவற்றிலும் துலங்கினார். அவர் எழுதிய “வெண்புறாவே“ பாடல் அழியா வரம் பெற்றது. தேசியப் பத்திரிகைகளில் பிரசுரிக்க முடியாத ஆக்கங்களை அவர் தனது “அஷ்ஷூரா“ பத்திரிகையில் பிரசுரித்து என்னைப் போன்ற வர்களை ஊக்கப்படுத்தினார். தினகரன் பத்திரிகையில் “புதுப் புனல்“ என்ற பக்கத்தின் மூலம் நூற்றுக்கணக்கான இளம் படைப்பாளிகளை ஊக்குவித்து வளர்த்தெடுத்தார்.

சமூகத்தை ஏமாற்றிப் பிழைத்தல், மார்க்கத்தை வைத்து வயிறு வளர்த்தல், ஆஷாடபூதித் தனம், பெண் கல்வி மறுப்பு, சிந்திக்காத மூடப் போக்குகள் போன்றவற்றை நேரடியாகச் சாடினார். ஒரு சமூகத்தின் அடையாளம் மார்க்கத்தில் மட்டும் தங்கியிருப்பதில்லை, அதன் கலை, கலாசார அம்சங்களிலும் தங்கியிருக்கிறது என்பதை மிக உறுதியாக அவர் நம்பினார். அதற்காகச் செயல்பட்டார். மரணத்துக் குப் பிறகும் கலை, இலக்கியத்தோடு சார்ந்த சமூகாபிமானிகளுக்கு ஒரு சிறந்த முன்னோடியாகவும் கையிலெடுக்கத் தக்க ஆயுதமாகவும் அவரை நினைக்கத் தோன்றுவது இதனால்தான். சமூகத்தில் குழப்பத்தையும் பிரச்சனைகளையும் ஏற்படுத்தியவர்களைச் சாடியதால் அவரையே ஒரு குழப்பவாதி என்று சித்தரிக்க முயன்றது பெரிய வேடிக்கை!

ஓர் அறைக்குள் இடது புறம் பத்திரிகைக் குவியல், வலது புறம் புத்தகக் குவியல், மேசையில் விரித்தபடி இருக்கும் வெள்ளைத்தாள் களும் பேனைகளுமாய் அமர்ந்திருந்து ஷம்ஸ் அவர்கள் சமூகத்தில் கலை, இலக்கியத்தைப் பயன்படுத்தி, அதிர்வுகளையும் தாக்கங்களை யும் ஏற்படுத்தினார். எல்லாவற்றையும் விடச் சிந்தனை மாற்றத்தை நோக்கிச் சமூகத்தை அழைத்துச் செல்ல அவர் மிகவும் பிரயாசைப் பட்டார். மனிதாபிமானத்தையும் சகோதரத்துவத்தையும் சக வாழ்வையும் கட்டி எழுப்புவதற்குக் கலையும் இலக்கியமும் பெரும் பங்களிப்புச் செய்யக் கூடியவை என்று நம்பினார். அப்படியே இயங்கினார்.



புதிய தலைமுறைக்கு எம்.எச். எம். ஷம்ஸ் என்ற ஆளுமையை யும் அவர் ஏற்படுத்திய தாக்கங்களையும் பற்றிப் பெரிய அளவில் தெரியாது. அவரது “கிராமத்துக் கனவுகள்“ நாவலும் தற்போது வெளிவந்திருக்கும் சிறுகதைத் தொகுப்புமே அன்னாரின் இலக்கியச் சொத்துக்களாகச் சமூகத்துக்குக் கிடைத்திருக்கின்றன. பல நூல்களை வெளியிடும் அளவு எழுத்தும் பல இயக்கங்களின் செயற்பாடும் தன்னகத்தே கொண்ட அவரை முழுமையாகச் சமூகத்துக்கு முன் கொண்டு வர வேண்டுமானால் அவரது அனைத்துப் படைப்புகளும் (முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்கும் எதிராக எழுதியோருக்கான அவரது மறுப்புக் கட்டுரைகள் உட்பட) வெளிக்கொண்டு வரப்படல் வேண்டும். அவற்றை வெளிக் கொண்டு வரும் கடமை அவரது பிறந்த ஊருக்கும் சமூகத்துக்கும் உரியது என்று அழுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மர்ஹூம் ஷம்ஸை அறியாதவர்கள், அவருடன் பழகாத வர்கள் அவரது செயற்பாடுகளையும் இயங்கியலையும் பார்த்து, அவரைக் கடும் கோபக்காரராக, இடைவெளி வைத்துத் தன்னைத் தனித்துவப்படுத்தும் ஒரு கனவானாகக் கற்பனை செய்யக் கூடும். அப்படியெனில் அந்தக் கற்பனை மிகவும் பிழையானது. அவரது சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் அவர் சொல்வதைப் பாருங்கள்...

“நான் என் மனுஷியின் பெயரிலேயே சிறுகதை எழுதினேன். நான் பாஹிராவைக் கைப்பிடித்த புதிதில்தான் “இன்ஸான்“ வெளிவந்தது. கல்யாணப் பரிசு படத்தில் தங்கவேலுவுக்கு ஏற்பட்ட நிலை தனக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதே மனுஷியின் பிரார்த்தனை!“

---

# பற்றாக்குறை தாமதங்கள் இன்றி மருந்து விநியோகத்தை உறுதி செய்க

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

பற்றாக்குறை மற்றும் தாமதங்கள் இன்றி தொடர்ச்சியான மருந்து விநியோகத்தை உறுதி செய்ய ஜனாதிபதி அறிவுறுத்தல்

மருந்து விநியோக செயல்முறையை முறைப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் இடையே இன்று (22) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

மருந்துகளின் கொள்முதல் மற்றும் விநியோகம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதோடு அந்தப் பொறிமுறையை சரிபடுத்தி பற்றாக்குறை மற்றும் தாமதங்கள் இல்லாமல் மக்களுக்கு மருந்துகளை தொடர்ச்சியாக வழங்குவதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



மருந்து கொள்முதல் செயல்முறை மற்றும் விநியோக பொறிமுறையில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகள் மற்றும் பலவீனங்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

சில மருத்துவமனைகளில் மருந்து பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். நாட்டில் மீண்டும் இதுபோன்ற நிலைமை ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்குமாறும் அதற்குத் தேவையான நீண்டகால திட்டங்களை உடனடியாக தயாரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மருத்துவமனைகளுக்கு மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நிதி ஏற்கனவே திறைசேரியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நாட்டு மக்களுக்கு உயர்தர சுகாதார சேவைகளை உறுதி செய்வதில் அனைவரும் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் சுட்டிக்காட்டினார்.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் (கொள்முதல்), டபிள்யூ.எஸ். என்.பொதேஜு, அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் மனுஜ் சீ. வீரசிங்க, தேசிய மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத் தலைவர் பேராசிரியர் ஜெயந்த விஜயபண்டார,தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் நிபுணத்துவ வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம மற்றும் சுகாதார அமைச்சின் சிரேஸ்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

---







ணுடூடு கிரிக்கெட் சுற்றுபோட்டியின் சம்பியனாக ஸஹிரியன் 95 தெரிவுசெய்யபட்டுள்ளதுடன் இந்த ஆண்டின்சிறந்த அணியாக ஸஹிரியன் 93 அணி தெரிவு செய்யப்பட்டது. இரு அணிகளுக்கான விருதுகளை பிரதம அதிதி பாரளுமன்ற உறுப்பினர் ஏ ஆதம்பாவா வழங்கி கௌரவித்தார்.

(எம்.எம். ஜெஸ்மின்)

# ஆகர்ஷணம் மிக்க துடிப்புள்ள இஸ்லாமிய ஆளுமை உஸ்தாத் அகார் முஹம்மத்

(பிஸ்தாமி அஹமத்)

இலங்கை மண் ஈன்றெடுத்த
ஆகர்ஷணம் மிக்க துடிப்புள்ள இஸ்லாமிய ஆளுமை இலங்கை வாழ் மக்களிடையே தவிர்க்க முடியாத ஜனரஞ்சக ஆளுமை உஸ்தாத் அகார் முஹம்மத். அவர்கள் பேருவளையில் அமைந்துள்ள இஸ்லாமிய உயர் கற்கைளுக்கான நளீமியா வளாகத்தின் இன்றைய மேம்பாட்டு க்கும் அடைவுக்கும் அவரதும் 50 ஆண்டு பணிகளும் அதற்கான பயணங்களும் உரமாய் அமைந்திருக்கின்றன என்பதனை மறுக்க முடியாது.
தேடல்
வாசிப்பு
தெவிட்டாத மொழி
கம்பீரக்கணீர் குரல்...
அலுப்பின்மை
ஊாயசளைஅயவஉை
யவவசயஉவழைெ
இவை தான் அவரது வெற்றியின் பின்னணி....
அவர் தலைசிறந்த பேச்சாளர். நிர்வாகி.வழிகாட்டி.
ஆகர்ஷணமிக்க போதகர். வானொலி தொலைக்காட்சி பத்திரிகை இணையம் சமூக ஊடகங்கள் என அனைத்தையும் தனது அழைப்புப் பணிக்காக சன்மார்க்க சமூக விழிப்புணர்வுக்காக பயன்படுத்தி வருகின்றார்.
இடைவிடாத தன்
பணியிலும் பயணத்திலும்
பொன்விழாக்காணும் உஸ்தாத் அகார் அவர்களுக்கு
வாழத்துக்கள
உண்மையில் அவர் தனி  ஆள் அல்ல.
தனக்குள் பல ஆளுமைகளை உட்பொதிந்துள்ள பன்முக
ஆளுமை.
எந்த இஸ்லாமிய கலையை எடுத்தாலும்
ஒவ்வொன்றையும்
எவ்வளவு அற்புதமாக
முழுமையாக
அலுப்பின்றி
சலிப்பின்றி
கற்பிப்பார் உரையாற்றுவார்
என்பதனை உஸ்தாத் அகார் அவர்களிடம் கற்றவர்களும் உரைகளைக் கேட்டவர்களும் அதிசயித்து அமைதியாய் ஆர்வமாய் உள்வாங்குவது
என்பது தான் அபூர்வமான விடயம்.



சுமார் ஐந்து தசாப்தங்கள் கடந்த
தேர்ந்த பழுத்த கற்பித்தல் அனுபவம் பெற்ற ஆசான். இஸ்லாமிய தஃவாக் களத்தில் தொடராக இயங்கி வருகின்றனர
ஹதீஸ் திறனாய்வுக்கலையின் ஆழம் காண அவரிடம்
கற்பது அரிய திருப்பு முனையாக அமையும்.
புத்தகங்களும் நூலாசிரியர்களும்
நூலின் கட்டமைப்பும்
எந் நன்னோக்கில் அந்நூல்
தொகுக்கப்பட்டுள்ளது
அதனால் என்ன நாடப்படுகிறது
அதனை எவ்வாறு கையாள்வது
அதனுடன் தொடர்பான ஏனைய நூல்கள் நூலாசிரியர்கள் என அத்தனையும் அத்துப்படியாக கற்றுத்தரும் ஹதீஸ் துறை நூல்களில் ஆழம் கண்டவர் அவர்.
ஹதீஸ் கலை முதுசங்களை நோக்கி எம்மை அழைக்கும் அழகிய நூல்கள் அவரது நா நுனியில் இருக்கும்
அரபிகள் எவ்வளவு கனகச்சிதமாக நூல்களுக்கு பெயர் வைத்துள்ளார்கள் என்று வியந்து போகும் இடம் அதுதான்.
அது போக
உஸ்தாத் அகார் சிறந்த பேச்சாளர் என்பதை எல்லாம் தாண்டி சிறந்த குரு
சிறந்த ஆசான். அகில இலங்கை ஜம் இயத்துல் உலமா பிரதித் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.
உஸ்தாத் அகார்
வருவதைக்கண்டால் ஒரு வித மயான அமைதி நிலவிப்படரும். வகுப்புக்கு எல்லோரும் ஓடி அடங்கி விடுவோம்.
அவர் மீதும் ஆளுமை மீதும் இயல்பாக ஊற்றெடுக்கும்
மதிப்பச்சமும் மரியாதையும் தான்.
அவை
வகுப்பில் எந்த சத்தமோ சந்தடியோ சலனமோ இருக்காது. பாடத்தை நா நுனியில் வைத்து இசகு பிசகின்றி அத்துப்படியாக அடுக்கிக்கொண்டே போவார். அவை தான் இன்னும் காதுகளில் ரீங்காரித்து எதிரொலிக்கின்றன.
இன்னும் பல இடங்களிலும் துடிப்புடன் செயற்பட்டுள்ளார்
அவரது நடை உடை பாவனை கட்டுப்பாடு கட்டுக்கோப்பு கம்பீரம், மொழி வளம் விடய உள்ளடக்கத்தின் ஆழ அகலம் என அழகான வகுப்பறையை நடாத்துபவர்.
இன்று ஓர் ஆசானாக இருக்க தேவயான ஏராளமான விடயத்தை அவரிடம் தான் கற்றுக்கொள்ளலாம். பெற்றுக்கொள்ளலாம்.
அவரிடம் நாம் கற்றது ஆளுமை, துணிவு, ஆழம் இவை போன்ற இன்ன பிற உலகியல் வாழ்வியல் அம்சங்கள் தாம்
பெரும்பாலும் இடைவேளையின் பிறகு
கொரிடோரில் எல்லோருமாக அளவளாவிக் கொண்டு இருப்போம்
அவ்வாறே அவரது ஈடுபாட்டை காட்டும் இன்னொரு துறை
சமகால இஸ்லாமிய உலகு
ஊழவெநஅிழசயசல
ஐளடயஅைஉ றழசடன
அப்பாடத்திலும்
இந்திய மொகலாய ஸ்பெயின் வரலாறுகள் அப்படியே விரல் நுனியில் இருக்கும்
லோடிகள்
கோரிகள்
துக்லக்..... என இந்திய வரலாற்றை
பாபர் என்றால் புலி என்று அர்த்தம் என்று சொன்னது இன்றும் கூட மறக்கவில்லை
உஸூலுல் ஹதீஸ் துறையில் நான் கண்ட நிபுணர் அவர் தான்...
அந்தளவு கெட்டித்தனத்தை கொட்டித்தீர்க்கும் பேராற்றலை அருளாகப்பெற்றவர்.
கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி
மற்றும்
உஸ்தாத் அகார் முஹம்மத் அவர்களது
குரலும் தொனியும் பேசுபொருளும்
இலங்கை வானொலி முஸ்லிம் சேவை ஊடாக
சிறு பராயம் முதல் பரீட்சயமானதே.
உஸ்தாத் அகார் ஒரு நபிமொழி யின் கடைசிப்பகுதியை அடிக்கடி சொல்வார்
ஒவ்வொருவரும் எதற்காக படைக்கப்பட்டுள்ளனரோ
அதன் பால் இலகு படுத்தப்பட்டுள்ளார்
எவ்வளவு அழகான பிரபஞ்ச நியதி இது
உஸ்தாத் அகாரிடம் பேச்சாற்றலை
கற்றுக்கொள்ளலாம்.
சொற்களை லாவகமாக
லாவண்யமாக கையாள கற்றுக்கொள்ளலாம்.குறிப்பாக உஸ்தாத் அகார்
அவரது பன்முக ஆளுமைக்கப்பால்
மொழித் தேர்ச்சியால் தான்  பலரும் அதிகம் ஈரக்கப்பட்டுள்ளனர்.
காலம் உருண்டோடினாலும்
அது எம்மீது அருளையும் வளத்தையும் அபிவிருத்தியையும் கூடவே அன்பையும் தான் சொரிந்துள்ளது
அவர் ஆரோக்கியமாக வாழவும் தொடர் பணியாற்றவும் இறைவன் அருள் புரியட்டும்.

# தென்னிலங்கையின் இன மத ஒற்றுமைக்கான அடையாளத்தின் ஆதர்ஷம்

## - வரலாற்று சிறப்புமிக்க பெலந்த பிரதேசம் -

களுத்துறை மாவட்டம், அகலவத்தை தேர்தல் தொகுதி, பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பெலந்த கிராமம், வீதிய பண்டார பெருவீரன் வாழ்ந்த வரலாற்று சிறப்புமிக்க பிரதேசமாகும். இந்தப் புராதன நகரம் வரலாற்று ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக அமைந்து காணப்படுகின்றது. வீதிய பண்டார இலங்கை வரலாற்றில் ஒரு வீர நாயகன் ஆவார். அவர் ஒரு திறமையான போராளி ஆவார். ஒருமுறை, போர்த்துகீசியர்களால் சிறையில் அடைக்கப்பட்ட வீதியம் பண்டார, புத்திசாலித்தனமாக சிறையிலிருந்து தப்பித்து பெலந்த பிரதேசத்துக்கு வந்து கோட்டையை நிர்மாணித்தார். அப்போது முதல், பெலந்த அவரது கோட்டையாக அமைந்து காணப்பட்டது.

வீதிய பண்டார இளவரசரோடு இவ்வாறு வந்த முஸ்லிம் மக்கள் பெலந்த பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் குடியேறினர். அவர்களின் குடியிருப்புகள் பெலந்த ஆற்றின் மறுகரையில் அமைந்து காணப்பட்டன. இளவரசர் வீதிய பண்டாரவுடன் வந்த பெரும்பாலான முஸ்லிம்கள் ஆற்றின் குறுக்கே குடியேறியதால் அந்தப் பகுதியில்தான் முதல் முஸ்லிம் பள்ளிவாசல் கட்டப்பட்டதாக புராணக்கதை கூறுகின்றன. இந்த பள்ளிவாசல் முதலில் களிமண்ணால் கட்டப்பட்டு, ஓலை வேயப்பட்ட கூரையைக் கொண்டமைந்து காணப்பட்டதோடு, பிற்பட்ட காலத்தில் அது சிமெந்து கற்கலால் அழகுத்தோற்றத்தோடு கட்டப்பட்டுள்ளது. இந்த பள்ளிவாசல் களிமண்ணால் கட்டப்பட்டு சமய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இதன் சரியான காலப்பகுதி ஆதரபூர்வமாக குறிப்பிடப்படவில்லை. (இதற்கு இருநூறு ஆண்டுகளுக்கும் மேலான வரலாறு காணப்படுகின்றன.)

களிமண்ணால் கட்டப்பட்ட மிகச் சிறிய பள்ளிவாசலினது முதலாவது நம்பிக்கையாளராக அல்ஹாஜ் கபூர் செயறப்பட்டார். அன்றைய காலத்தில் இந்த பள்ளிவாசலுக்கு முன்பாகவே பாடசாலையும் அமைந்திருந்தது. இவ்வாறு பள்ளிவாசலின் முன் அமைந்திருந்த பாடசாலையை தற்போதைய இடத்திற்கு இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளையும் கபூர் அவர்களே மேற்கொண்டுள்ளார். இப்பாடசாலையின் முதலாவது முஸ்லிம் மாணவராக முஹம்மது சாலி திகழ்கிறார்.

அல்ஹாஜ் கபூருக்குப் பிறகு, (துண்டல் அப்பா) என அழைக்கப்பட்ட நைனா மரிக்காரே  பள்ளிவாசலின் நம்பிக்கையாளராக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளார். இவருக்குப் பிறகு, அல்ஹாஜ் ஹனிபா நம்பிக்கையாளராக இருந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளார். அவரைத் தொடர்ந்து அல்ஹாஜ் ஹனிபா அவர்களினது மகன் அல்ஹாஜ் முஸ்தபா அவர்கள் நம்பிக்கையாளராக திகழ்த்தார். மிகுந்த சிரமத்துடன் இந்த பள்ளிவாசல் செங்கற்களால் மீண்டும் கட்டப்பட்டதோடு முன் நுழைவாயிலும் சிற்பங்களுடன் கட்டப்பட்டது.

பின்னர், அல்ஹாஜ் மர்சூக் இந்த பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவரது காலத்தில், புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. பெலந்த பகுதியில் உள்ள விகாரை மற்றும் பள்ளிவாசலுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையில் இவர் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார். அப்போதைய அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருடன் சேர்ந்து, இவரும் பெலந்த ரஜ மகா விஹாரையின் தலைமை தேரர் சங்கைக்குரிய தேவமுல்ல கல்யாணவன்ச அவர்களும் மின்சாரத்தைப் பெறுவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது அமைந்துள்ள பள்ளிவாசலோடு சேர்ந்து காணப்படும் தேயிலைத் தோட்டம் மற்றும் மையவாடி காணியை கொள்வனவு செய்வதற்கு அல்ஹாஜ் முஸ்தபா, அல்ஹாஜ் ஏ.டபிள்யூ. நதீம் மற்றும் அல்ஹாஜ் மௌசூக் ஆகியோர் தனிப்பட்ட முறையில் அதிக நிதி பங்களிப்புகளைச் செய்துள்ளனர். மேலும், அல்ஹாஜ் வசூர்தீன் அவர்களும் தனது சொந்த காணியை பள்ளிவாசலுக்கு வக்பு செய்துள்ளார். அல்ஹாஜ் நதீமுக்கும் எங்கள் விகாரைக்கும் இடையிலான தொடர்பு மூன்று தலைமுறைகளாக இன்னும் வலுவாகவே காணப்படுகின்றன.

இளவரசர் வீதிய பண்டார காலம் முதல் இன்று வரை சிங்கள முஸ்லிம்களிடையே பரஸ்பர புரிதலும் ஒற்றுமை பிணைப்பும் அவ்வாறே இருந்து வருகிறது. பெரும் சகோதரத்துவம் எம்மத்தியில் காணப்படுகின்றன. இதற்கு சிறந்த உதாரணம் நமது தற்போதைய ராஜ மகா விஹாரையின் பிரதம தேரர் ஆவார். இந்த அற்புதமான பிணைப்பின் அடையாளமாக சங்கைக்குரிய தேவமுல்ல கல்யாணவன்ச தேரர் திகழ்ந்து வருகிறார். அவருக்கு முன் காலமான பெலந்த பிரதம தேரருடன் பிரதேச முஸ்லிம் மக்களிடையே பெரும் பிணைப்பு காணப்பட்டன.

இந்தப் பிணைப்புனதும் ஒற்றுமையினதும் வலிமையால்தான் இன்றும் கூட, நாட்டின் எந்தப் பகுதியிலேனும் இன அல்லது மதப் பிரச்சினைகள் எழுந்தாலும், எனது கிராமத்தில் அத்தகைய பதற்றம் எதுவும் நடக்காமைக்கான காரணமாக அமைந்து காணப்படுகிறது. எனது கிராமத்தில் பேச்சுக்களிலேனும் அல்லது நடத்தைகளிலேனும் எந்த வித முரண்பாடுகளும் காண்பிக்காமைக்கான பிரதான காரணம் இந்த சகோதரத்துவ பிணைப்பாகும். தென்னிலங்கையின் இன மத ஒற்றுமைக்கான அடையாளத்தின் ஆதர்ஷமாக பெலந்த பிரதேசம் இனியும் அமைந்து காணப்பட பிரார்த்திக்கின்றேன்.







(முஹம்மத் நஸ்ரான்)




அரபாத் பஹுர்தீன்

# செம்பியன் ஒப் லெஜென்ட்ஸ் ரி20

## பாகிஸ்தானுடன் மோத மறுத்தது இந்தியா

சர்வதேச கிரிக்கெட்டிற்கு விடைகொடுத்த வீரர்கள் பங்கேற்கும் இரண்டாவது உலக சம்பியன்ஸ் ஒப் லெஜெண்ட்ஸ் ரி20 லீக் தொடர் இங்கிலாந்தில் கடந்த 18ஆம் திகதி ஆரம்பித்து இடம்பெற்று வருகின்றது.
இதன் முதல் போட்டியில் பாகிஸ்தான் செம்பியன்ஸ் அணி இங்கிலாந்து செம்பியன்ஸ் அணியை வெற்றி கொண்டிருந்தது.
இத் தொடரில் நடப்பு செம்பியன் இந்தியா, இங்கிலாந்து, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய 6 அணிகள் மோதுகினறன. இத் தொடரின் முதல் சுற்று லீக் முறையில் இடம்பெறுகிறது. இதன் காரணமாக ஒரு அணி மற்றைய 5 அணிகளுடன் தலா ஒரு லீக் போட்டியில் மோதுகின்றது. அதற்கமைய இந்த தொடரில் நேற்று (20) மாலை பர்மிங்காமில் கிரிக்கெட் வைரிகளான இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி நடைபெறுவதாக இருந்தது.
இந்நிலையில், இந்த ஆட்டத்தில் இந்திய வீரர்களான ஷிகர் தவான், சுரேஷ் ரெய்னா, ஹர்பஜன் சிங் உள்ளிட்ட வீரர்கள் விளையாட மறுப்பு தெரிவித்தனர். ஜம்மு காஷ்மீரின் முக்கிய சுற்றுலா தலமான பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பாகிஸ்தானே காரணம் என குற்றஞ்சாட்டி இந்திய மூத்த கிரிக்கெட் வீரர்கள் பாகிஸ்தானுக்கு எதிராக விளையாட மறுப்பு தெரிவித்ததாக கூறப்படுகிறது.
இதன் காரணமாக நடைபெறவிருந்த இந்தியா, பாகிஸ்தான் ஆட்டம் இரத்து செய்யப்பட்ட இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டது.

# பாகிஸ்தானை வீழ்த்தி முன்னிலை பெற்றது




சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் போட்டியில் சகலதுறையில் அசத்திய பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்று தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது.
பங்களாதேஷ் அணிக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரில் பங்கேற்பதற்காக சல்மான் அலி அஹா தலைமையிலான பாகிஸ்தான் அணி பங்களாதேஷ் சென்றுள்ளது.
இத் தொடரின் முதல் போட்டி நேற்று (20) மிர்பூரில் இரவுப் போட்டியாக இடம்பெற்றது. இப் போடாடியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.
இதற்கமைய முதலில் துடுப்பாடிய பாகிஸ்தான் அணி 19.3 பந்து ஓவர்களுக்கு மாத்திரம் முகம் கொடுத்து 110 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக் களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் பக்கர் ஷமான் 44 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் டஸ்கின் அஹமட் மற்றும் முஸ்தபிசுர் ரஹீம் ஆகியோர் முறையே 3 மற்றும் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.
பின்னர் 111 என்ற மிக இலகுவான வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய பங்களாதேஷ் அணி 15.3 ஓவர்களில் வெறும் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுகளால் இலகு வெற்றி பெற்றதுடன் தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது.
துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீரரான பர்வீஷ் ஹுசைன் எமோன் 56 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். பந்துவீச்சில் சல்மான் மிர்ஷா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.
இப்போட்டியின் நாயகனாக பர்வீஷ் ஹுசைன் எமோன் தெரிவானார்.
இவ்விரு அணிகளும் இடையிலான தீர்க்கமான 2ஆவது போட்டி செவ்வாய்க்கிழமை (22) இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவனல்லை யுனைடட் விளையாட்டுக் கழகம் அபார வெற்றி

மாவனல்லை யுனைடட் விளையாட்டுக் கழகத்திற்கும் Great Star விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான டுநயபரந 1 இரண்டு இறுதிப் போட்டிகளிலும் மாவனல்ல விளையாட்டுக் கழகம் 1 - 0 மற்றும் 3- 0 என்ற கோல் கணக்கில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியை பதிவு செய்திருக்கின்றது.
2025.07.12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு Race Course சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற முதலாவது இறுதிப் போட்டியில் 1 -0 என்ற அடிப்படையிலும் 2025.07.19 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் 3 - 0 என்ற அடிப்படையில் அபாரமாக கோள்களை அடித்து சம்பியன் பட்டத்தை உறுதிப்படுத்தி இருக்கின்றது.
இலங்கை உதைப்பந்தாட் சம்மேளனத்தின் Football Federation of Srilanka League 1 - 2025 சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இவ்வாறு நிறைவு பெற்றிருக்கின்றன.
இந்த லீக் போட்டிகளில் யுனைடட் விளையாட்டுக் கழகம் பங்குபற்றிய போட்டிகள் பலவற்றில் வெற்றிபெற்று இவ்வாறு புசயனெ குயைட இறுதிப் போட்டிக்கு தெரிவாகி இருக்கின்றது.
அண்மைக்காலமாக மாவனல்லை யுனைடட் விளையாட்டு கழக Football Team அணி வீரர்கள் வெளிப்படுத்தி வருகின்ற அபரிமிதமான திறமைகள் பாராட்டப்பட வேண்டியதாகும் .
ஏற்கனவே நடந்து முடிந் த லீக் போட்டிகளில் இலங்கையில் பல பாகங்களிலும் இருந்தும் வந்து பங்குபற்றிய பலம்பொருந்திய பல அணிகளை தோற்கடித்த நிலையில் வீரர் சிபானின் அபாரமான ஆட்டம் கோள் காப்பாளரின் திறமை மற்றும் எல்லா விரர்களதும் அயராத முயற்சி காரணமாக இத்தகைய வெற்றிகளை பெற முடிந்தமை பாராட்டத் தக்கதாகும்.
எமது ஊரில் சுமார் அரை நூற்றாண் டுக்கு மேலாக மிகவும் திறம்பட இயங்கி வருகின்ற யுனைடட் விளையாட்டுக் கழகம் எமது கிருங்கதெனிய கிராமத்தை தளமாகக் கொண்டு உதயமானாலும் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்கள் வரை சென்று திறமைகளை வெளிப்படுத்தக் கூடிய உதைப்பந்தாட்ட வீரர்களை உருவாக்குவதில் பெரும் பங்களிப்பை செய்து வருகின்றமை எமது பிரதேசத்திற்கு மாத்திரமன்றி இலங்கை தேசத்திற்கே பெருமை தேடித்தருவதாக அமைவதோடு அணியின் வீரர்களது திறமைகளை பாராட்டி உற்சாகப்படுத்த வேண்டியதாக இருக்கின்றது.
எமது பாடசாலையான பதுரியா மத்திய கல்லூரியின் பல வயது மட்ட பிரிவு மாணவர்கள் அண்மைக்கால ங்களில் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய




மட்ட உதைப்பந்தாட் போட்டிகளில் பங்குபற்றி சாதனைகளை படைப்பதற்கும் எமது ஊரின் ஒரே விளையாட்டுக் கழகமான யுனைடட் விளையாட்டுக் கழகமும் அதன் வீரர்களும் வழங்கி வருகின்ற ஒத்துழைப்பு பாராட்டப்பட வேண்டியதாகும்.
அதனால் Grand Final போட்டியிலும் எமது United Heroes வெற்றிவாகை சூடியமை எமது மாவனல்லை மண்ணுக்கு பெருமை சேர்ப்பதாக அமைகின்றது.

**பதிவு - அமீர் ஹுசைன்**

# புத்தளம் நகர பாடசாலைகளை சேர்ந்த ஐந்து மாணவர்கள் வெற்றி பதக்கங்களை பெற்று சாதனை



(எம்.யூ.எம். சனூன்)

விளையாட்டு துறையில் புத்தளம் நகர பாடசாலைகளை சேர்ந்த ஐந்து மாணவர்கள் கடல் கடந்து வெற்றி பதக்கங்களை அள்ளிக் குவித்து சாதித்து காட்டி இருக்கின்றார்கள்.
மலேசியாவில் நடைபெற்ற 17வது ஊமு கிளாசிக் சர்வதேச திறந்த டைக்வுண்டோ சாம்பியன்ஷிப் (Open Taekwondo) போட்டிகளில் பங்குபற்றிய புத்தளம் மாணவர்கள் 15 ற்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்று இலங்கை நாட்டுக்கும், புத்தளம் நகருக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.
பயிற்றுவிப்பாளரும், தடகள வீரருமான இஷாரா பியூமாலி சமரகோன் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கல பதக்கங்கள், புத்தளம் சாந்த அன்றூஸ் தேசிய பாடசாலை மாணவி என்.ஈ.அசேன் விஷ்மிகா மூன்று தங்கப்பதக்கங்கள், புத்-தளம் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பாடசாலை மாணவி ஏ.ஆர்.எப்.ஹனா மஸ்யத் சாரா இரண்டு தங்கப்பதக்கங்கள் மற்றும் ஒரு வெள்ளி பதக்கம், புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலை மாணவி எம்.எச்.ரீமா செய்ன் இரண்டு தங்கப்பதக்கங்கள், புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை மாணவன் எம்.எம்.ஷாதின் அஹமத் மூன்று வெள்ளி பதக்கங்கள் என 15 பதக்கங்களை அள்ளிக்




குவித்து சாதித்து காட்டியுள்ளனர்.
இந்த வெற்றி வீரர்கள் ஐவரையும் வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் செல்கின்ற நிகழ்வு புத்தளம் நகர மத்தியில் வியாழக்கிழமை (17) காலை இடம்பெற்றது.
புத்தளம் மாநகர மேயர் பொறியியலாளர் ரின்சாத் அஹ்மத் அவர்களோடு புத்தளம் பீனிக்ஸ் அகடமி நிர்வாகமும் இணைந்து இந்த ஊர்வல நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.
புத்தளம் போல்ஸ் வீதியில் அமைந்திருக் கின்ற பீனிக்ஸ் சர்வதேச பாடசாலையிலே நடைபெற்ற இது தொடர்பான பிரதான நிகழ்விலே புத்தளம் மாநகர சபை மேயர் பொறியியலாளர் ரின்சாத் அஹ்மத் உள்ளிட்ட வெற்றி வீரர்கள் கேக் வெட்டி தமது சந்தோஷத்தை வெளிப்படுத்தினர்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.